# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,685/4—1966 මාර්තු 8 වැනි අඟහරුවාද—8.3.1966

14,685/4 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு மாச்சு மாதம் 8 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ஜி. ஜி. ஓ. இல. டபிள்யு. 68/66 (3)

**பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்** — **அத்தியாயம் 40.**

இராசாங்க அமைச்சரின் ஆலோசனையின் மீது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் மகாதேசாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**டபிள்யூ. கொபல்லவ**
*மகாதேசாதிபதி.*

*மகாதேசாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு, 1966 ம் ஆம் மார்ச்சு மீ 8ந் உ.*

**ஒழுங்குவிதிகள்**

சுருக்கப் பெயர்

1. இவ்வொழுங்குவிதிகள், 1966 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளுந் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

அவசரகால ஒழுங்கு விதிகளின் பொருள்கோடல்கள்.

2. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறுவகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி, அல்லது சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி—

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியோடு தொடர்புபட்டு வரும்போது வழக்குரைஞர்–தலைமையதிபதியை, எவரேனும் பிரதி வழக்குரைஞர்–தலைமையதிபதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக சட்டத்துறைத் தலைமையதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட முடிக்குரிய நியாயவாதியாயுள்ள யாரேனும் முடிக்குரிய நியாயவாதியையும் உள்ளடக்கும் ;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியோடு தொடர்புபட்டு வரும்போது, அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவிதமாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பெயர்கொண்டு அல்லது பதவிப்பெயர்கொண்டு முதலமைச்சரால் நியமிக்கப்படும் ஆள் எனப் பொருள்படும் ;

"அவசரகால ஒழுங்குவிதி" என்பது இவ் ஒழுங்குவிதிகளில் ஏதேனுமொன்று, அல்லது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு (அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும்) வேறேதேனுமோர் ஒழுங்குவிதி என்று பொருள்தரும் ;

"அத்தியாவசிய சேவை" என்பது பொதுமக்களுக்குப் பயன்பாடுடையதாக அல்லது பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக மகாதேசாதிபதியின் கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு சேவை என்று பொருள் தருந்தலோடு அத்தகைய சேவை உடையதென அவ்விதம் வெளிப்படுத்தப்படும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது திணைக்களக் கிளையையும் உள்ளடக்கும் ;

"வெடிபொருள்" என்பது வெடிபொருள்சட்டத்திற் குறிக்கப்படும் அக்கருத்தினையே உடையது ;

"காணி" என்பது நீர் செறிந்துள்ள நிலத்தையும், வீடுகளின் அல்லது கட்டடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும் ;

"தேவைக்கெடுத்தல்" என்பது ஏதேனும் சொத்தினோடு தொடர்புபட்டுவரும்போது சொத்தின் ஆட்சியை எடுத்தல், அல்லது தேவைக்கெடுக்கும் அதிகாரி அச் சொத்தினை வேண்டியவாறு கையாள்வதற்கு வசதி செய்யும்படி பணித்தல் என்று பொருள்படுவதோடு அதன் இலக்கண வேறுபாடுகளும் அல்லது கூட்டு மொழிகளும் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஒரு சட்டத்தினை அல்லது கட்டளைச் சட்டத்தினைப் பொருள் அமைத்துக் கொள்வதற்குப் பொருள்கோடற் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகவிருக்கும் அவ்வாறே அவசரகால ஒழுங்குவிதியொன்றை அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளை அல்லது விதிகளைப் பொருளமைத்துக்கொள்வதற்கு அக்கட்டளைச் சட்டம் ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியைப்பற்றிய ஏதேனும் பத்திரத்தில் அல்லது எழுத்து மூலச் சட்டத்தில் வரும் எந்தவொரு குறிப்பீடும், முரணான நோக்கம் தென்பட்டாலொழிய, பொது மக்கள் பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டும், பின்னைய எவையேனும் ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான (அப்போதைக்கு நடைமுறையிலுள்ளதான) அவ் ஒழுங்குவிதியைக் குறிப்பீடு செய்வதாகவே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் சேவையைப் பொதுமக்களுக்குப் பயன்பாடுடையதாக, அல்லது பொது மக்களின் பாதுகாப்பிற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக வெளிப்படுத்தி இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ் மகாதேசாதிபதியால் ஆக்கப்படும் எந்தக் கட்டளையும் பொதுவில் இலங்கை முழுமைக்கும் என, அல்லது அந்தக் கட்டளையிற் சுட்டிக் குறிப்பிடப்படும் ஏதேனும் பிரதேசத்துக்கென அல்லது பகுதிக்கென ஆக்கப்படலாம்.

*தகுதிவாய்ந்த அதிகாரி*

3. (1) ஏதேனுமோர் அவசர கால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படும் எவரேனுமொருவரின் நியமனம் பொதுவில் இலங்கைத் தீவு முழுவதற்குமாய் இருக்கலாம், அல்லது எந்த எழுத்தின் மூலமாக அத்தகைய ஆள் நியமிக்கப்படுகின்றாரோ அந்த எழுத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் பிரதேசத்திற்கு அல்லது இடத்திற்காய் இருக்கலாம், அத்துடன் அத்தகைய எழுத்து மூலத்திற் குறிப்பிடப்படும் அத்தகைய நோக்கங்களுக்குமட்டும் வரையறுக்கப்பட்டதாயும் இருக்கலாம் :

ஆயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் எவையேனும் நோக்கங்களுக்கென, அல்லது குறிப்பிட்ட ஏதேனும் பிரதேசம் அல்லது இடத்திற்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதை விலக்குவதாகக் கருதப்படலாகாது.

(2) பதவிப்பெயருடைய உத்தியோகமொன்றை வகிக்கும் ஒருவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அதற்கு முரண்படும் வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய நியமனம் அப்பதவிப்பெயரையுடைய உத்தியோகத்தின் கடமைகளை அப்போதைக்கு நிறைவேற்றிவரும் ஆளுக்கும் பொருந்துவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*வாகனங்களைத் தேவைக்கெடுத்தல்.*

4. (1) பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதி பேணுவதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் தொடர்ந்து நடாத்துவதற்கு அவ்விதம் செய்தல் தேவையானது அல்லது உகந்தது எனத் தகுதி வாய்ந்த அதிகாரி கருதின், அவர் இலங்கையிலுள்ள எந்த வாகனத்தையும் தேவைக்கெடுக்கலாம் ; எடுத்து அத்தகைய தேவைக்கெடுத்தல் தொடர்பாக அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி தேவையானது அல்லது உகந்ததென்று காணும் அத்தகைய பணிப்புகளை இடலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ்த் தகுதிவாய்ந்த ஓர் அதிகாரி ஏதேனுமொரு வாகனத்தைத் தேவைக்கெடுக்குமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, பொதுமக்களின் பாதுகாப்புக்கருதி அல்லது பொது அமைதி பேணுதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் தொடர்ந்து செய்து வருவதற்குகந்ததென்று தகுதிவாய்ந்த அதிகாரி கருதும் அத்தகைய நோக்கங்களுக்கும் அத்தகைய முறையிலும் அந்த வாகனத்தைப் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம் அல்லது அந்த வாகனம் பயன்படுத்தப்பட அல்லது கையாளப்பட அதிகாரமளிக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) ஆல் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பயனுறச் செயற்படுத்துவதற்கு அப்படிச் செய்யவேண்டியது அவசியம் என்று தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உள்ளத்தில் தோன்றினால், இலங்கை முழுமைக்குமாக அல்லது குறித்த ஏதேனும் பிரதேசத்துக்கு மட்டுமாகக் கட்டளையொன்றைப் பிறப்பிப்பதன் மூலம் அந்தக் கட்டளை நடைமுறைக்கு வருகின்ற அந்த நேரத்தில் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படுகின்ற பிரதேசத்தின் கண்ணுள்ள ஏதேனும் வளவில் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படுகின்ற அத்தகைய வாகனத்தை தம்முடைய ஆட்சியில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆள் எவரும் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஆளினால் அல்லது அதிகாரியினால் அந்த வாகனம் அந்த வளவிலிருந்து அப்புறப்படுத்தல் அனுமதியளிக்கப்படும்வரை அந்த வாகனத்தை அகற்றவோ அகற்றும்படி செய்யவோ அகற்ற அனுமதிகொடுக்கவோ கூடாது என்று பணிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளினால் யாரேனுமொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்தகைய ஒருவருக்கு உதவும்படி அல்லது துணை செய்யும்படி

பொலிசுத்தியோகத்தரெவரும் வேறு யாரேனுமோர் அரசாங்க உத்தியோகத்தரும், வேண்டப்படின் அவர்கள் அவ்வாறு உதவ வேண்டும் அல்லது துணை செய்ய வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது தரைப் படை ஏவுநர், கடற்படைத் தலைவன், ஆகாயப்படை ஏவுநர், பொலிசுப் பரிசோதகர் தலைவர், ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் அரசாங்க அதிபர் அல்லது 46 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் பிரதேசத்திற்கென நியமிக்கப்பட்ட இணைப்பலுவலர் என்ற பொருள்தரும்.

5. எந்தவோராளும்—

பொய்யான கூற்றுக்கள்

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்கு விதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு விடையளிக்கும்போது முக்கியமான ஒரு விபரத்தில் பிழையானதென்று அவரறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய கூற்றைக் கூறினால் அல்லது தகவலைத் தெரிவித்தால், அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் அளிக்கும்படி கேட்கப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுத்தல், மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறேதேனும் பத்திரம் என்பவற்றில் மேற் சொன்னமாதிரியான கூற்றைக் கூறினால்

ஒரு குற்றஞ் செய்தமைக்காக அவர் குற்றவாளியாதல் வேண்டும்.

தகவல் பெறுதற்கான அல்லது பொருளைச்சோதித்தற்கான தத்துவம்.

6. (1) இவ் ஒழுங்குவிதிகளிலடங்கியுள்ள சிறப்பேற்பாடுகள் எவற்றிற்கும் பங்கமின்றி, ஆள் எவரும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் அவ்விதம் செய்யும்படி வேண்டப் படுமிடத்து அவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளதும் அவர்வசமுள்ளதும் பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி, அல்லது பொது அமைதி பேணுதற்கு அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக அத்தகவலைப் பெறுதல் அல்லது பொருளைப் பரிசோதித்தல் அவசியமானது அல்லது உகந்ததென்று, வேண்டுகை விடுக்கும் அதிகாரி அல்லது ஆள் அபிப்பிராயப்படும் அத்தகைய தகவலாய் அல்லது பொருளாய் உள்ளதுமான அத்தகைய செய்தியை அல்லது பொருளை அவ் வேண்டுதலில் குறிப்பிடப்படும் அவ் ஆளுக்கு அல்லது அத்தகைய அதிகாரிக்கு கொடுத்தல் வேண்டும், அல்லது காண்பித்தல் வேண்டும். இவ்வொழுங்கு விதியின் கீழ், முறைப்படி விடுக்கப்பட்ட வேண்டுகையைப் பின்பற்றி ஏதேனும் தகவலைக் கொடுத்துதவ அல்லது அவரிடமுள்ள பொருளைக் கொடுக்க யாரேனுமொருவர் தவறின் அவர் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவார்.

(2) இந்த ஒழுங்குவிதியில் "பொருள்" என்பது ஏதேனும் புத்தகத்தை, கணக்கை அல்லது பத்திரத்தை உள்ளடக்கும்.

தேடுதல், கைப்பற்றல் கைது செய்தல், தடுத்து வைத்தல் என்பவற்றிற்கான தத்துவங்கள்

7. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஒரு குற்றத்தைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிவதாக அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள யாரேனும் ஆள் ஒருவரை, யாரேனும் பொலிசுத்தியோகத்தர், தரைப்படை, இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச ஆகாயப்படை என்பவற்றிலுமுள்ள யாரேனுமுறுப்பினர் அல்லது சிறைச்சாலை ஆணையாளர் அல்லது சிறைச்சாலையின் யாரேனும் கண்காணிப்பாளர், உதவிக் கண் காணிப்பாளர் அல்லது தகுதிகாண் காலத்துக் கண்காணிப்பாளர், அல்லது யாரேனும் கைதிக் காவலாளர், அல்லது பிரதிக் கைதிக் காவலாளர், அல்லது யாரேனும் சிறைக் காவலன், அல்லது சிறை மேற்பார்வையாளர், அல்லது இவ்வொழுங்குவிதியின் கீழ் செயலாற்றும்படி முதலமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமொருவர், தேடுகை செய்யலாம், அத்தகைய தேடுகை செய்தற்காகத் தடுத்துவைக்கலாம், அல்லது பிடியாணையில்லாமலே கைது செய்யலாம்; மேலும் அக்குற்றம் புரிவதில், அல்லது அதன் தொடர்பாக உபயோகிக்கப்பட்ட எவ்விதமானதுமான ஏதேனும் வாகனம், மரக்கலம், பொருள் அல்லது பதார்த்தத்தைக் கைப்பற்றலாம், அகற்றலாம், அல்லது தடுத்துவைக்கலாம்.

(2) முதலமைச்சர் யாரேனுமொருவருக்கு—

(அ) எந்தவொரு வளவு, இடம், வாகனம் அல்லது மரக்கலத்துள்ளும் புகுவதற்கும் தேடுகையிடுவதற்கும்,

(ஆ) யாரேனுமொருவரைத் தேடுகையிடவும் தேடுகையிடும் நோக்கத்துக்காகத் தடுத்து வைக்கவும்,

அத்தகைய தேடுகையிடுதலின்போது கண்டுபிடிக்கப்படும் ஏதேனும் பொருளை, பதார்த்தத்தை அல்லது வேறெந்த வகையான பொருளையும் கைப்பற்றவும் அகற்றவும், பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அல்லது பொதுமக்கள் அமைதியை நிலைநாட்ட அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி களின் நோக்கங்களுக்காக அத்தகைய பொருள்களைப் பரிசோதித்தல் அல்லது பொறுப்பெடுத்தல் அவசியமென்று அத்தகைய தேடுகையிடுதலை நடாத்தும் ஆள் அபிப்பிராயப்படின் அவ்வாறு பரிசோதிக்கவும் அல்லது பொறுப்பெடுக்கவும் எழுத்துமூலம் அதிகாரமளிக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (2) இன் கீழ், தேடுகையிடுதலை நடாத்தும் யாரேனு மொருவர், அவரது தேடுகையிடுதலின் நோக்கத்தோடு தொடர்புபட்ட அல்லது சம்பந்தமுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக தேடுகையிடப்படும் வளவில் அல்லது இடத்தில் அல்லது மரக்கலத்தில் அல்லது வாகனத்தில் உள்ள எவரையும் அல்லது தேடுகையிடப்படும் ஆளை கேள்விகள் கேட்கலாம்.

(4) இவ்வொழுங்கு விதியின் பந்தி (3) இன் கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வோர் ஆளும், அவர் விசாரிக்கப்படும் அந்தக் கருமம் தொடர்பாக அவருக்குத் தெரிந்துள்ள அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் கீழ்த் தேடுகையிடப்படவேண்டிய ஏதேனும் வளவில், இடத்தில் வாகனத்தில் அல்லது மரக்கலத்தில் வசிப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர், தேடுகையிடுதலை நடாத்துபவர் கேட்டவுடன் அவரை அவற்றுள் நுழைய விடுத்து அவர் தேடுகையிடுதற்கு வேண்டிய வசதிகளையும் செய்தல் வேண்டும்.

(6) இந்த ஒழுங்குவிதியின் கீழான ஒரு தேடுகையிடுதலை நடாத்தும் எவரும், தேடுகையிடப்படவேண்டிய வளவு, இடம், வாகனம் அல்லது மரக்கலத்துள் நுழைதற்காக ஏதேனும் உட்கதவை அல்லது வெளிக்கதவை அல்லது உள்யன்னலை அல்லது வெளியன்னலை உடைக்கலாம்.

(7) பெண்ணொருத்தியைத் தேடுகையிடுதல் அவசியமென்று கண்டவிடத்து, வேறொரு பெண்ணைக் கொண்டு அப்பெண்ணைத் தேடுகையிடுதல் வேண்டும்.

(8) (அ) இந்த ஒழுங்குவிதியின் கீழ்க் கைது செய்யப்பட்ட எந்த ஆளும் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து அகற்றப்பட்டு இலங்கையின் எந்தப் பாகத்திலும் கட்டுக்காப்பிற்றடுத்து வைக்கப்படலாம்.

(ஆ) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியால், கைதுசெய்யும்படி அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஆளும், இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தைக் கையாளவும், அந்த நோக்கங்களுக்குத் தேவையான அத்தகைய எல்லா வலோற்காரங்களையும் (ஆயுதப்படையுட்பட) பயன்படுத்தவும் உரிமையுடையராதல் வேண்டும்.

(இ) இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளைப் பின்பற்றித் தடுப்புக் காவலில் வைக்கப்படும் எந்த ஆளும் சட்டப்படியான கட்டுக்காவலிலிருப்பதாகக் கருதப்படல் வேண்டும் என்பதோடு பொலிசுப் பரிசோதகர் தலைவர் அதிகாரமளிக்கும் அத்தகைய இடத்தில் அவருடைய கட்டளைகட்கிணங்கத் தடுத்துவைக்கப்படவும் வேண்டும் ; அத்தகைய இடம் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறைச்சாலையாயின் அத்தகைய கைதியைக் கையேற்று அவரைத் தடுப்புக்காவலில் வைத்தல் அச்சிறைச்சாலைப் பொறுப்புத்தியோகத்தரின் கடமையாதல் வேண்டும்.

அறிவித்தல்கள் விடுத்தல்

8. ஏதேனும் அவசர கால ஒழுங்குவிதியிற் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் சிறப்பேற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனுமொரு ஒழுங்கு விதியின் நோக்கங்களுக்காக யாரேனுமொருவர் மீது விடுக்கவிருக்கும் ஓர் அறிவித்தலை, அந்த ஆளுக்கு அவர் கடைசியாய் இருந்த இடத்திற்கு அல்லது வழக்கமான வாழிடத்திற்கு அல்லது அவர் வேலைசெய்யுமிடத்திற்கு முகவரியிட்ட அஞ்சலில் அனுப்புதன் மூலம், விடுக்கலாம்.

கட்டளைகள் முதலானவற்றை நீக்குதலும் வேறுபடுத்தலும்

9. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்கு விதியால் அளிக்கப்பட்ட எந்தவொரு தத்துவமும், அக்கட்டளையை அல்லது விதியை நீக்குதற்கு அல்லது வேறுபடுத்துதற்கு அதே முறையிலும், நிபந்தனைகளேதுமுளவாயின் அந்த நிபந்தனைகளுக்கமையவும், கையாளப்படக்கூடிய தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

மகாதேசாதிபதியின் தத்துவங்கள்.

10. வேறுவிதத்தில் தெட்டத்தெளிவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலல்லாது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், மகாதேசாதிபதிக்கு அல்லது வேறு யாரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் உரிமைகளோடு அல்லது தத்துவங்களோடு மேலதிகமானவையாக இருக்கவேண்டுமேயன்றி அவற்றைப்பாதிப்பனவாகவிருத்தலாகாது.

ஊரடங்குச் சட்டம்

11. (1) முதலமைச்சர், இலங்கையின் ஏதேனும் பிரதேசம் தொடர்பாக, கட்டளையொன்றன் மூலம், அக்கட்டளையால் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பிந்திய கட்டளையால் செய்யப்படும் அத்தகைய விலக்குகளுக்கமைய, அந்தப் பிரதேசத்தில் ஆள் எவரும் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய நேரங்களுக்கிடையில் அல்லது அத்தகைய காலங்களில் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஏதேனும் பொதுத்தெரு, புகைவண்டிப்பாதை, பொதுப் பூங்கா, பொழுதுபோக்குத் திடல், அல்லது வேறுவிளையாட்டுத் திடல் அல்லது கடற்கரை அல்லது வேறேதேனும் கட்டடம், வளவு அல்லது இடத்தில் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகை ஆளால் வழங்கப்பட்ட அநுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் மீதன்றி நிற்கக் கூடாதெனப் பணித்தல் கூடும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் "பொதுத் தெரு" என்பது பொதுப்பாலமொன்றின் மேலுள்ள ஏதேனும் தெருவழி, ஏதேனும் நடைபாதை, ஏதேனும் வடிகால், அணைக்கட்டு அல்லது பொதுத் தெருவுக்குரிய அல்லது பொதுத் தெருவோடு தொடர்புபட்ட குழி என்பவற்றை உள்ளடக்கும்.

ஊர்வலங்கள் கூட்டங்களுக்குத்தடை

12. (1) முதலமைச்சர், கட்டளையொன்றன் மூலம், அந்தக் கட்டளையிற்குறிப்பிடப்படும் இலங்கையிலுள்ள பிரதேசமெதிலும், பொது ஊர்வலங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது அத்தகைய ஊர்வலங்கள் அல்லது கூட்டங்களின் வகுப்பைச் சேர்ந்த வேறு ஊர்வலங்கள், அல்லது கூட்டங்கள், என்பன குறிப்பிடப்படும் அத்தகைய காலங்களில் நடைபெறுதலை அக்கட்டளையால் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பிந்திய கட்டளையாற் செய்யப்படும் அத்தகைய விலக்குகளுக்கமையத் தடை செய்தல் கூடும்.

(2) இலங்கையின் எதேனுமொரு பிரதேசத்தில் எதேனும் ஊர்வலம் அல்லது கூட்டம் நிகழ்தல் பொது அமைதியைக் குழப்பக் காரணமாயிருக்கும் அல்லது பொதுமக்களுக்குள் வெறுப்பு மனப்பான்மையை ஏற்படுத்தும் என்று முதலமைச்சர் அபிப்பிராயப்படின், முதலமைச்சர் அத்தகைய ஊர்வலங்களை அல்லது கூட்டங்களைத் தடைசெய்யும்படி பணித்தல் கூடும்.

(3) இந்த ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் அல்லது விடுக்கப்படும் எவையேனும் கட்டளைகள் அல்லது பணிப்புகள் இணங்கியொழுகப்படச் செய்வதற்கு, நியாயமான அளவில் தேவையென்று தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலோடு அத்தகைய வலுக்கட்டாயத்தையும் எந்தப் பொலிசுத்தியோகத்தரும் பயன்படுத்தல் கூடும்.

அத்தியாவசியச் சேவை அளித்தல் தடை செய்யப்படுதல் முதலியன.

13. (1) ஒழுங்குவிதி 2 இன் கீழ் எதேனுமொரு சேவை அத்தியாவசியச் சேவையென மகாதேசாதிபதியால் ஆக்கப்படும் கட்டளையால் வெளிப்படுத்தப்பட்டவிடத்து, 1966 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ஆம் தேதியன்று அல்லது அத்தேதியின் பின்னர் அந்தச் சேவை தொடர்பான எதேனும் வேலையில் ஈடுபட்டிருந்த அல்லது வேலைக்கமர்த்தப்பட்டிருந்த எந்த ஆளும், அத்தகைய கட்டளை நடைமுறைக்கு வந்த தேதிக்குப் பின்னர் ஒரு நாட்கழிந்த பின்பு அவருடைய வேலை நிலையத்திற்கு அல்லது தொழில் நிலையத்திற்கு அல்லது அவரை வேலைக்கமர்த்தியவரால் அல்லது அவ்வேலைக்கமர்த்தியவரின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் ஓர் ஆளால் காலத்திற்குக் காலம் குறிக்கப்படும் அத்தகைய இடத்திற்குப் போகத்தவறின் அல்லது, அத்தகைய கட்டளை நடைமுறைக்கு வந்த தேதிக்குப் பின்னர் ஒரு நாட்கழிந்த பின்பு வேலைக்கமர்த்தியவரால் அல்லது வேலைக்கமர்த்தியவரின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் ஆளால் பணிக்கப்படும் அத்தகைய வேலையைப் புரிவதற்குத் தவறின் அல்லது மறுப்பின், வேலைநிறுத்தக் காரணத்தை முன்னிட்டே அவர் அவ்வாறு சமூகமளித்தற்கு அல்லது வேலை செய்தற்குத் தவறினர் அல்லது மறுத்தாரென்றிருந்தாலும், அவர்—

(அ) எல்லா நோக்கங்களுக்கும் அவரது தொழிலைத் துறந்தவராக அல்லது விட்டு நீக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும் ; இதற்கு முரணாக வேறெந்தச் சட்டத்திலும் அல்லது அவருடைய தொழில் தொடர்பாகச் செல்லுபடியாகக் கூடிய எதேனும் ஒப்பந்தத்தின் நியதி நிபந்தனைகளில் என்ன சொல்லப்பட்டிருப்பினும் மேல் மொழிந்ததே செல்லுபடியாதல் வேண்டும் ; அன்றியும்

(ஆ) குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 2 இன் கீழ் மகாதேசாதிபதியால் ஆக்கப்படும் கட்டளையின் மூலம் எதேனுமொரு சேவை அத்தியாவசிய சேவையென வெளிப்படுத்தப்பட்டவிடத்து—

(அ) எந்தவொரு விதத்திலும்—

(i) அந்தச் சேவையைத் தொடர்ந்து நடைபெறுவதனை இடையூறு செய்யும் தடைசெய்யும், சுணக்கும் அல்லது குறைக்கும், அல்லது

(ii) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுதலில் ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறுயாரேனுமோராளை வேலைசெய்யுமிடத்திற்குச் சமூகம் தாராதவாறு இடையூறு செய்யும், தடைசெய்யும், தடுக்கும் அல்லது

(iii) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுதலில் ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை அவர் வேலை செய்யுமிடத்துக்குச் சமூகம் தராதிருக்குமாறு ஏவும், தூண்டும், அல்லது ஊக்கமளிக்கும், அல்லது

(iv) அரசாங்கத் திணைக்களத்தினது அல்லது அதன் கிளையினது சேவையாகவுள்ள தனக்குப் பதிலாக அல்லது நிகரான எதேனும் வேறு சேவையை நிறுவும்படி அல்லது நிலைநாட்டும்படி வற்புறுத்தும், ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும், அல்லது

(v) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதற்காக ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறுயாரேனுமோராளை அவர் செய்துகொண்டிருக்கும் வேலையைக் கையளிக்கும்படி வற்புறுத்தும், ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் (அதன் விளைவாக அத்தகைய ஆள் சேவையைக் கையளித்தாலும் சரி கையளிக்காது விட்டாலும் சரி அல்லது விலகினாலும் சரி விலகாவிட்டாலும் சரி) அல்லது

(vi) அந்தச் சேவையை நடைபெறச் செய்தற்காக அல்லது அது தொடர்பாக யாரேனுமொருவர் தொழிலைக் கொடுத்தலை அல்லது ஏற்றலைத் தடை செய்யும் எந்த ஆளும் ; அல்லது

(ஆ) உடற்செயல் மூலம் அல்லது எதேனும் பேச்சுமூலம் அல்லது எழுத்து மூலம் வேறு யாரேனுமோராளை, இப்பந்தியின் உட்பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்ட எதேனுஞ் செயலைச் செய்யும்படி ஏவும் தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் (அதன் விளைவாக அவர் அத்தகைய செயலைச் செய்தாலும் சரி செய்யாது விட்டாலுஞ் சரி) எந்த ஆளும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) யாரேனுமோராள், இவ்வொழுங்குவிதிக் கெதிரான எதேனுமொரு குற்றத்திற்காக எதேனுமொரு நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, அத்தகைய குற்றத்திற்காக நீதிமன்றம் சுமத்தும் தண்டனையோடு—

(அ) அந்த ஆளுக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவில்லாச் சொத்துயாவும் அத்தகைய குற்றத்தீர்ப்பின் காரணமாக மேன்மைதங்கிய மகாராணியாருக்கு இழக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் அத்தகைய ஆளால் அத்தகைய சொத்து உரிமைமாற்றப்பட்டால் அல்லது வேறேதும் வழியில் முடிவு செய்யப்பட்டால் அத்தகைய உரிமை மாற்றம் அல்லது முடிவு செய்கை செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகவிருந்திருப்பதாகவும் இருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

தொலை பேசிவசதிகளில் கட்டுப்பாடு

14. (1) எப்பொழுதாயினும்—

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தால் நடாத்தப்படும் உபகரணங்களின் துணையால் தொழிற்படுத்தப்படும் தொலைபேசிகள் மூலம் பெற்று வந்த செய்தித் தொடர்பு வசதிகள், தொலைபேசி வசதிகளைத் தொடர்ந்து செய்துவருதற்கு வேண்டிய ஆட்கள் இல்லாமையால் அல்லது வேறு காரணத்தால் கட்டுப்படுத்தப்பட்டு, அத்தோடு

(ஆ) கிடைக்கூடிய அத்தகைய வசதிகள், கூடிய வரை, எவையேனும் அத்தியாவசிய சேவைகளின் நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படுதலை உறுதி செய்தல் அவசியமென்று தந்திப்போக்குவரத்துப் பணிப்பாளர் அபிப்பிராயப்படின்,

ஏதேனும் அத்தியாவசிய செய்தித் தொடர்பைச் செய்யும் நோக்கங்களுக்குத் தேவைப்படவில்லை என்று பணிப்பாளர் அபிப்பிராயப்படும் ஏதேனும் தொலைபேசி, பயன்படுத்தப்படுதலைத் தடை செய்வதற்காகப் பணிப்பாளர், தொலைபேசி வசதிகளை நீக்கலாம் அல்லது நிறுத்திவைக்கலாம் அல்லது அவசியமென்று அவர் காணும் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் அல்லது எடுக்கும்படி செய்யலாம்.

இந்தப் பந்தியில் " அத்தியாவசிய செய்தித் தொடர்பு " என்பது பொது அமைதி நிலை நாட்டல் அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருதல் என்பவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் விளைவான நோக்கங்களுக்குத் தேவையான ஏதேனும் செய்தித் தொடர்பு என்று பொருள்தரும்.

(2) எவரேனும் ஓர் ஆள்—

(அ) பொதுமக்கள் பாதுகாப்பிற்கு அல்லது பொது அமைதியை நிலைநாட்டற்கு அல்லது அத்தியாவசியச் சேவைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் செயலாற்றுதலை, அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ்த் தடைசெய்யப்பட்ட கழகமாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கழகத்தின் கொள்கைகளை அல்லது திட்டங்களை அல்லது குறிக்கோள்களை முன்னேற்றும் நோக்கத்திற்காக ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்தலை அல்லது செய்யாது விடுதலை, அல்லது

(இ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை மீறிச் செயற்படும் வண்ணம் ஆட்களை ஏவுதலை, உதவி செய்தலை அல்லது துணை செய்தலை

தடுக்கும் பொருட்டு அந்த ஆள் பயன்படுத்தும் தொலைபேசி வசதியை நீக்குதல் அவசியமென்று பொலிசுப் பரிசோதகர் தலைவர் அபிப்பிராயப்பட்டால் அவர் அவ்வாறு செய்யும்படி தந்திப் போக்குவரத்துப் பணிப்பாளரை வேண்டலாம் ; அந்த வேண்டுகை செய்யப்படுமிடத்து அத்தகைய பணிப்பாளர் அந்த ஆள் பயன்படுத்திய தொலைபேசி வசதிகளை நீக்கல் வேண்டும்.

(3) பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் காலத்திற்குக் காலம் துணியும் அத்தகைய ஏதேனுமொரு காலவெல்லைக்குள் அவர் துணியும் அத்தகைய ஏதேனும் இடங்களுக்கிடையில் அத்தகைய இடங்கள் ஒரே மாகாணத்தில் இருந்தாலுஞ் சரி இல்லாவிடினுஞ் சரி அவர் அங்கீகரிக்கும் அத்தகைய நோக்கங்கள் தவிர்ந்த வேறு எந்த ஒரு நோக்கத்திற்கும் தந்திச் செய்தித் தொடர்பு கிடைக்கக் கூடியதாயிருத்தலாகாது.

(4) ஏதேனும் தொலைபேசி அமைப்பினை வாடகைக்கெடுத்தல் அல்லது பயன் படுத்தல் பற்றிய ஏதேனும் ஒப்பந்தத்தில் எது எவ்வாறு சொல்லப்பட்டிருப்பினும் அரசாங்கம் அல்லது தந்திப் போக்குவரத்துப் பணிப்பாளர் அல்லது அவரின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் யாரேனுமுத்தியோகத்தர் இவ்வொழுங்குவிதியின் கீழ் அவர்க்களிக்கப்படும் தத்துவங்களைப் பின்பற்றி ஏதேனும் செயலை அல்லது அலுவலைச் செய்கின்றமை காரணமாக ஏற்படும் நட்டத்திற்கு அல்லது வேறேதேனும் பொறுப்பிற்குப் பாத்திரராகார்.

தந்தி, கம்பியில்லாத் தந்தி வசதிகளுக்குக் கட்டுப்பாடு.

15. (1) முதலமைச்சர், கட்டளையின் மூலம் குறிப்பிடும் அத்தகைய ஏதேனும் பிரதேசத்தில், அல்லது அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் பிரதேசத்தின் அத்தகைய ஏதேனும் இடத்தில் நிறுவப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் தந்திப் பொறித் தொகுதியை அல்லது கம்பியில்லாத் தந்திப் பொறித் தொகுதியை, அந்தப் பிரதேசத்துக்குள்ளேயோ வெளியிலேயோ செய்தி கடத்தற்கோ, அந்தப் பிரதேசத்திற்குள்ளிருந்தோ வெளியிலிருந்தோ கடத்தப்படும் செய்திகளை வாங்குதற்கோ பயன்படுத்துதல் ஆகாது.

(2) இவ்வொழுங்கு விதியின் பந்தி (1) இன் நோக்கங்களுக்காக " தந்திப் பொறித் தொகுதி " என்ற சொற்றொடரும் " கம்பியில்லாத் தந்திப் பொதுத் தொகுதி " என்ற சொற்றொடரும் தந்திப் போகுவரத்து கட்டளைச் சட்டத்தில் காணப்படும் பொருள்களை முறையே கொண்டனவாயிருக்கும்.

16. (1) (அ) குடியேற்றக் குடியகல்வுச் சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எதனையேனும் மீறி இலங்கைக்குள் நுழைகின்ற, அல்லது

(ஆ) அந்தச் சட்டம், கட்டளை அல்லது ஒழுங்குவிதி என்பவற்றின் ஏற்பாடு எதனையேனும் மீறி எந்த ஒரு முறையிலேனும் வேறொராளை இலங்கைக்குட் கொண்டு வருகின்ற,

ஆள் எவரும் ஒரு குற்றத்துக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைதல்.

(2) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் (அ) என்னும் உட்பந்தியின் கீழான ஏதேனுமொரு குற்றத்திற்காக யாரேனுமோராளின் மீது தொடரப்பட்ட எவ்வழக்கின் கண்ணும் அத்தகைய ஆள் குடியேற்றக் குடியகல்வுச் சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட கட்டளை அல்லது ஒழுங்குவிதி ஒன்றின் ஏற்பாடுகள் எதனையேனும் மீறி, இலங்கைக்குள் நுழைந்தார் என்று உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாத பொலிசு உத்தியோகத்தர் ஒருவர் நம்புவதாகக் கூறுவதும் அத்தகையவரால் விடுக்கப்படுவதுமான சான்றிதழொன்று காட்டப்படின் அத்தகைய ஆள்—

(அ) அந்தச் சட்டத்தின் 3 ம் பகுதி தமக்குப் பொருந்தாதென்று, அல்லது

(ஆ) அத்தகைய ஏற்பாட்டுக்கிணங்கத் தாம் இலங்கைக்குள் நுழைந்தாரென்று, அல்லது

(இ) அந்தச் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட நியமித்த தேதிக்கு முன்னர்த் தாம் இலங்கையிலே இருந்தவர் என்றும் அதன் பின்னர் இலங்கையை விட்டு வெளியே போகவில்லையென்றும், அல்லது

(ஈ) அத்தகைய தேதியன்று அல்லது அதன் பின்னர் தாம் இலங்கையிற் பிறந்தாரென்றும், அதன் பின்னர் இலங்கையை விட்டு வெளியே போகவில்லையென்றும்,

நிரூபித்தாலொழிய, அத்தகைய ஆள் அத்தகைய ஏற்பாட்டை மீறி இலங்கைக்குள் நுழைந்தாரென்றே ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) ன் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழான ஏதேனுமொரு குற்றத்திற்காகத் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கின் கண் அத்தகைய சான்றிதழில் குறிப்பிடப்பட்ட ஆள், குடியேற்றக் குடியகல்வுச் சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட கட்டளை அல்லது ஒழுங்கு விதியொன்றின் ஏற்பாடுகளுள் எதனையேனும் மீறி இலங்கைக்குள் நுழைந்தாரென்று உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாத பொலிசுத்தியோகத்தர் ஒருவர் நம்புவதாகக் கூறுவதும் அத்தகையவரால் விடுக்கப்படுவதுமான சான்றிதழ் ஒன்று காட்டப்படின் அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட ஆள்—

(அ) அந்தச் சட்டத்தின் 3 ம் பகுதிக்குப் பொருந்தாதவர் என்று, அல்லது

(ஆ) அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கைக்குள் நுழைந்தாரென்று, அல்லது

(இ) இந்தச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட நியமித்த தேதிக்கு முன்னர் இலங்கையிலிருந்தவரென்றும் அதன் பின்னர் இலங்கையை விட்டு வெளியே போகாதவர் என்றும், அல்லது

(ஈ) அத்தகைய தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கையிற் பிறந்தவரென்றும் அதன் பின்னர் இலங்கையை விட்டு வெளியே போகாதவரென்றும்,

குற்றஞ் சாட்டப்பட்டவரால் நிரூபிக்கப்பட்டாலொழிய, அவ்வாறு பெயர் குறிக்கப்பட்டவர் அத்தகைய ஏற்பாட்டை மீறி இலங்கைக்குள் நுழைந்தாரென்றே ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகள், குடியேற்றக் குடியகல்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைப் பாதிப்பனவாயிருத்தலாகாது.

17. பொதுப்பாதுகாப்பு நிலைநாட்டற்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருதற்கு உதவி செய்யும் பொருட்டாக அல்லது அது தொடர்பாக ஏதேனும் வேலை செய்யும்படி அல்லது உடலுழைப்பு வழங்கும்படி, முதலமைச்சர் தமது கைப்படவுள்ள கட்டளையின் மூலம் எவரையும் பணிக்கலாம் அல்லது அவ்விதமே பணிப்பதற்கான தத்துவத்தை அதற்கெனக் குறிப்பிடப்பட்ட யாரேனுமோரதிகாரி அல்லது அதிகாரிகளுக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு வழங்கலாம்.

உடற்சேவைகளைப் பணித்தல்

18. எந்த ஆளும்—

(அ) (i) பகிரங்க ஊழியர் ; அல்லது

(ii) மேன்மை தங்கிய மகாராணியாரின் சேவையில் ஈடுபட்டுள்ளவர் ; அல்லது

(iii) அத்தியாவசிய சேவைகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளவர்

என்போர்க்கிடையில் வெறுப்பை ஏற்படுத்தவோ ;

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள யாரேனுமொருவரை, அத்தகையவர் பகிரங்க ஊழியர் என்ற முறையில், அல்லது விஷயத்துக்கேற்ப, அவ்விதம் ஈடுபட்டிருக்கும் ஆள் என்ற முறையில் அவர் செய்யவேண்டிய கடமையினின்றும் தவறும் வண்ணம் எதனையும் செய்யும்படி அல்லது செய்யாது விடும்படி ஊக்கமுயலவோ ; அல்லது

வெறுப்பு ஏற்படுதலைத் தடுத்தல்

(இ) (அ) என்னும் உட்பிரிவை அல்லது (ஆ) என்னும் உட்பிரிவை மீறும் உட்கருத்தோடு அல்லது மீறுகைக்கு உதவி செய்யும், துணை செய்யும், அல்லது அறிவுரை கூறும் உட்கருத்தோடு, தன்னுடைய ஆட்சியில் அல்லது தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் மேற்குறித்த அத்தகைய எவரேனும் ஆட்களுக்கு, அத்தகைய பத்திரத்தின் படிகளைப் பகிர்வு செய்தல் அத்தகைய மீறுகையாக அமையக்கூடிய அத்தகைய ஏதேனும் பத்திரத்தை வைத்திருக்கவோ ;

கூடாது.

அரசின் மேற் பகை கிளப்பலும் கிளர்ச்சி செய்தலும்.

19. சொல்லால், (பேசப்பட்ட சொல்லாயினுஞ் சரி எழுதப்பட்ட சொல்லாயினுஞ் சரி) அல்லது குறிகளால் அல்லது பார்க்கக்கூடிய சைகைகளால், அல்லது நடத்தையால் அல்லது வேறேதேனும் செய்கையால்—

(அ) மன்னனை அல்லது அரசாங்கத்தை பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்கும், அல்லது பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்க முயலும், அல்லது மன்னனுக்கு அல்லது அரசாங்கத்துக்கெதிராக வெறுப்புணர்ச்சியை அல்லது பகையுணர்ச்சியை அல்லது இழிவுணர்ச்சியைத் தூண்டிவிடும் அல்லது ஏற்படுத்தும் அல்லது தூண்டமுயலும், அல்லது ஏவமுயலும் ; அல்லது

(ஆ) இலங்கை அரசியலமைப்புத் திட்டத்தை அல்லது நீதிநிருவாகத்தைப் பகைமைக்கு அல்லது இழிவுக்கு உள்ளாக்கும் அல்லது பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்க முயலும் அல்லது இலங்கை அரசியலமைப்புத் திட்டத்தை அல்லது நீதிநிருவாகத்தை வெறுக்கச் செய்யத்தக்கதான அல்லது இழிக்கச் செய்யத்தக்கதான உணர்ச்சியைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவ முயலும் ; அல்லது

(இ) சட்டப்படி நிறுவப்பட்ட ஏதேனும் விடயத்தை சட்டப்படியல்லாத வேறு வழிகளால் மாற்றிப் பெறும்படிக்கு இலங்கைவாழ் மக்களை அல்லது அவர்களில் ஏதேனுமொரு பகுதியினரை அல்லது வகுப்பினரை அல்லது தொகுதியினரைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவமுயலும் ; அல்லது

(ஈ) இலங்கைவாழ் மக்களுக்கிடையில் அல்லது அவர்களில் ஏதேனுமொரு பகுதியினருக்கிடையில் அல்லது வகுப்பாருக்கிடையில் அல்லது தொகுதியினருக்கிடையில் திருப்தியின்மையை அல்லது வெறுப்பை உண்டாக்கும் அல்லது ஏற்படுத்தும் அல்லது உண்டாக்க முயலும் அல்லது ஏற்படுத்த முயலும் ; அல்லது

(உ) இலங்கை வாழ் குடிகளின் வெவ்வேறு பிரிவினர்க்கிடையில் அல்லது வகுப்பினர்க்கிடையில் அல்லது கூட்டத்தார்க்கிடையில் வெறுப்புணர்ச்சியை அல்லது எதிர்ப்புணர்ச்சியை எழுப்பும் அல்லது வளர்க்கும் அல்லது எழுப்ப முயலும் அல்லது வளர்க்கமுயலும் ; அல்லது

(ஊ) சட்டப்படி நிறுவப்பட்ட ஏதேனும் விடயத்தை மாற்றும்படி அல்லது ஏதேனும் செய்கையை அல்லது அலுவலைச் செய்யும்படி அல்லது தவிர்க்கும்படி பாராளுமன்றத்தை அல்லது அரசாங்கத்தைத் தூண்டும் அல்லது வற்புறுத்தும் நோக்கத்திற்காக, ஏதேனும் வகையான உடல்வலிமையை அல்லது பலாத்காரத்தினைப் பயன்படுத்தும்படி, அமைதியை மீறும்படி, சட்டத்தைப் பணியாதிருக்கும்படி, அல்லது சட்டம் தொழிற்படுவதைத் தடுக்கும்படி இலங்கை வாழ்மக்களை அல்லது அவர்களிலொரு பிரிவினரை அல்லது வகுப்பினரை அல்லது கூட்டத்தினரைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவமுயலும் ; அல்லது

(எ) மகாதேசாதிபதியை அல்லது செனேற் சபையுறுப்பினர் யாரேனுமொருவரை அல்லது பிரதிநிதிகள்சபையின் யாரேனுமொரு உறுப்பினரை அல்லது பகிரங்க ஊழியரை, அவர்க்குரிய ஏதேனும் சட்டமுறையான தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிக்கும்படி அல்லது நிறைவேற்றும்படி தூண்டும் அல்லது வற்புறுத்தும் நாட்டத்தோடு அல்லது நிறைவேற்றாது தடுக்கும்படி தூண்டும் அல்லது வற்புறுத்தும் நாட்டத்தோடு அடிக்கும் அல்லது பிழையான முறையில் தடுத்து வைக்கும், அல்லது பிழையான முறையில் தடுத்துவைக்கமுயலும் அல்லது உடற்பலத்தால் அல்லது உடற்பலத்தைக் கொண்டு அல்லது உடற்பலத்தின் காரணமாக அச்சுறுத்தும் அல்லது அந்த வாறாக அச்சுறுத்த முயலும் ; அல்லது

(ஏ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை மீறுவதாக அமையக்கூடிய ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்யும்படி அல்லது செய்யாது விடும்படி இலங்கை வாழ் மக்களை அல்லது அவர்களில் யாரேனும் பிரிவினரை அல்லது வகுப்பினரை அல்லது கூட்டத்தினரைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவ முயலும்,

எவரும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாகிக் குறைந்தது மூன்று மாதங்கள் வரை நீடிக்கக் கூடியதும், கூடிய இருபதாண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியலினால் தண்டிக்கப்படக் கடவர் ; அத்துடன் குற்றப்பணம் ஒன்றும் விதிக்கப்படலாம்.

பிரசுரங்களைக் கட்டுப்படுத்தல்

20. (1) பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது பொதுமக்களின் அமைதியைப் பேணுதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்திவருதற்குக் குந்தகம் விளைக்கும் அல்லது விளைக்கக்கூடிய ஏதேனும் செய்தி, அல்லது நேரடியாகவோ, பொதுமக்களுக்கு அல்லது பொதுமக்களிலொரு பகுதியினருக்கு இடைஞ்சல் செய்தன் மூலமோ, அரசாங்கத்தைப் பணியவைக்கக் கருதப்படும் நடவடிக்கைகளை எடுக்கும் வண்ணம் ஆட்களை ஏவும் அல்லது ஊக்கும் செய்தி, இலங்கையில் அல்லது குறிப்பான இலங்கையின் ஏதேனுமொரு பகுதியில் வெளியிடப்படுதலை அல்லது இலங்கையிலிருந்து பிற இடங்களுக்கு அனுப்பப்படுதலைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி தாம் அவசியமென்று காணும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம், அத்துடன் அத்தகைய பணிப்புகளையும் விடுக்கலாம் ; இந்தப் பந்தியின் கீழ் உள்ள பணிப்புகள், பத்திரங்கள், படமுறைக் குறிப்புகள், ஒளிப்படங்கள், இயக்கப்படங்கள், அல்லது இயக்கப்படத் திரைச்சித்திரங்கள், என்பன வெளியிடப்படுவதன் முன்னர் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு முன்வைக்கப்படுதலை அல்லது காட்டப்படுதலைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் உள்பட தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அவசியமென்று அல்லது உகந்ததென்று தோன்றும் அத்தகைய விளைவேற்பாடுகளையும் துணையேற்பாடுகளையும் கொண்டிருக்கலாம் ;

(2) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ்க் கொடுக்கப்படும் பணிப்புகளிலேதேனும்மொன்றை மீறும் ஒவ்வொருவரும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ; செய்தித்தாளொன்றை வெளியிட்டதன் காரணமாக எவரேனும் அத்தகைய குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் காணப்படின் அவரை முதலமைச்சர், கட்டளையொன்றின் மூலம் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய காலத்திற்கு இலங்கையில் எச்செய்தித் தாளையும் வெளியிடக்கூடாதெனப் பணிக்கலாம்.

(3) ஏதேனுமொரு செய்தித்தாளில், பொது மக்களின் பாதுகாப்பிற்கு அல்லது பொது மக்களின் அமைதியைப் பேணுதற்கு, அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருதற்குக் குந்தகம் விளைக்கவெனக் கருதப்படும் செய்தி, அல்லது நேரடியாகவோ அல்லது பொதுமக்களுக்கு அல்லது பொதுமக்களின் ஒரு பகுதியினருக்கு இடைஞ்சல் செய்தல் மூலமோ அரசாங்கத்தைப் பணியவைக்கவெனப் கருதப்படும் நடவடிக்கைகளை எடுக்கும் வண்ணம் ஆட்களை ஏவும் அல்லது ஊக்கும் செய்தி, வெளியிடப்பட்டிருக்கிறதென்று அல்லது வெளியிடப்பட்டிருந்ததென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால் அவர் கட்டளையொன்றின் மூலம் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை அந்தச் செய்தித் தாளுக்கு ஏற்புடையனவாக்கலாம்.

(4) தகுதிவாய்ந்த ஓர் அதிகாரி, கட்டளையொன்றின் மூலம் இவ்வொழுங்கு விதியின் ஏற்பாடுகளை, அக்கட்டளையின் பெயரால் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு செய்தித் தாளிற்கேற்புடையன வாக்கியிருக்கின்றவிடத்து, அத்தகைய ஏற்பாடுகள் அந்தப் பெயரின் கீழ் வெளியிடப்படும் ஏதேனும் செய்தித் தாளுக்கு மட்டுமன்றி, வேறேதேனும் பெயரால் வெளியிடப்படும் ஏதேனும் செய்தித் தாளுக்கும், அத்தகைய செய்தித்தாள் கட்டளையின் பெயரால் குறிப்பிடப்பட்ட செய்தித் தாளின் தொடர்ச்சியாக அல்லது பதிற் செய்தித் தாளாக இருப்பின், ஏற்புடையதாதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் கட்டளை மூலம் அதனுக்கு ஏற்புடையனவாக்கப்பட்ட செய்தித் தாளெதையும் எவரும் அச்சிட, வெளியிட, அல்லது பரப்ப அல்லது அச்சிடுதல், வெளியிடுதல் அல்லது பரப்புதலில் எந்த வகையிலேனும் தொடர்புபட்டிருக்கக்கூடாது.

(6) இவ்வொழுங்குவிதியின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன் பின்னர் எந்த நேரத்திலும், முதலமைச்சர், அவர் தகுந்ததென்று கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அக் கட்டளை செயற்படுதலை நிறுத்திவைக்கும்படி பணிக்கலாம் ; அத்தகைய பணிப்பை அழிக்கவும் செய்யலாம்.

(7) ஏதேனும் ஓர் அச்சகம் அல்லது யாரேனுமோராளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஓர் அச்சகம், பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது பொதுமக்களின் அமைதியைப் பேணுதற்கு, அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருதற்குக் குந்தகம் விளைக்கவெனக் கருதப்படுகின்றதாகத் தாம் அபிப்பிராயப்படுகின்ற செய்தியைக் கொண்டிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, அல்லது நேரடியாகவோ அல்லது பொது மக்களுக்கு அல்லது பொதுமக்களின் ஒரு பகுதியினருக்கு இடைஞ்சல் செய்தன் மூலமோ அரசாங்கத்தைப் பணியவைக்கவெனக் கருதப்படும் நடவடிக்கைகளை எடுக்கும் வண்ணம் ஆட்களை ஏவும் அல்லது ஊக்கும் செய்தியைக் கொண்டிருக்கும் ஏதேனும் பத்திரத்தைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதென்று அல்லது பயன்படுத்தப்படலாமென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால், கட்டளையொன்றின் மூலம் அந்த அச்சகம், அல்லது விஷயத்துக்கேற்ப, அந்த ஆளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள எல்லா அச்சகங்களும் அல்லது அவற்றுள் எதுவும் அக்கட்டளை வலுவிலுள்ள காலம் வரைக்கும் எந்தவொரு நோக்கத்திற்கும் அல்லது கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படலாகாது எனக் கட்டளை மூலம் பணிக்கலாம் ; மேலும் அத்தகைய எந்தக் கட்டளையும், அதிலே குறிப்பிடப்பட்ட ஆட்களுள் எவரையும் அக்கட்டளைக்கு இணங்கும்படி செய்தற்குத் தேவையென்று, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை (எந்த அச்சகம் தொடர்பாகக் கட்டளைவிடுக்கப்பட்டதோ அந்த அச்சகத்தை ஆட்சியெடுத்தல் அல்லது அந்த அச்சகம் அமைந்துள்ள எந்த வளவையும் ஆட்சியெடுத்தல் அல்லது அத்தகைய அச்சகத்தின் ஒரு பகுதியை ஆட்சியெடுத்தல் அல்லது அத்தகைய வளவின் ஒரு பகுதியை ஆட்சியெடுத்தல் உட்பட) எடுக்க அதிகாரமளிக்கலாம்.

(8) இவ்வொழுங்குவிதியின் (3) ம், (7) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆட்களைக்கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றோ பலவோ இருத்தல் வேண்டும் ;

(3) ஆம் (7) ஆம் பந்திகளுள் எதன் கீழும் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை முறையற்றது என்று யாரேனுமொருவர் கருதினால், அவர் அது தொடர்பான ஆட்சேபனைகளை இயைபான ஆலோசனைக் குழுவுக்குத் தெரிவிக்கலாம்.

(9) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் அல்லது (7) ஆம் பந்தியின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்பட்டவிடத்து, அத்தகைய கட்டளையாற் பாதிக்கப்பட்ட செய்தித்தாளுடைமையாளருக்கு அல்லது அச்சகச் சொந்தக்காரருக்கு, அந்தக் கட்டளை தொடர்பாக அவர் முதலமைச்சருக்கு எழுத்துமூலம் அவருடைய முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாமென்றும், அவ்வாறு முதலமைச்சருக்கு முறைப்பாடு செய்தாலுஞ்சரி, செய்யவிட்டாலுஞ்சரி, அவரது ஆட்சேபனைகளை ஆலோசனைக்குழுவிற்குத் தெரிவிக்க லாம் என்றும் அறிவுறுத்துவித்தல், தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

(10) மேற்சொன்னவாறான அத்தகைய ஆட்சேபனையை பரிசீலனைசெய்யும் பொருட்டுக் கூட்டப் படும் ஆலோசனைக்குழுக் கூட்டம் எதுவும் முதலமைச்சரால் நியமிக்கப்படும் தலைவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும் ; அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கும் ஒவ்வோராளும், தமது ஆட்சேபனைக்கு ஆதாரமாக வேறு முறைப்பாடுகளை நேர்முகதாவில் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தல் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(11) மேற்சொன்னவாறான அத்தகைய ஆட்சேபனைகள் மீது, ஆலோசனைக்குழு தெரிவிக்கும் அறிக்கை முதலமைச்சர் முன் வைக்கப்படுதல் வேண்டும். முதலமைச்சர் அதைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர், அவ் ஆட்சேபனைகள் எந்தக் கட்டளை தொடர்பாக எழுப்பப்பட்டனவோ அந்த கட்டளையை அளிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(12) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளில் ஏதேனுமொன்றை அல்லது இவ்வொழுங்குவிதி யின் பந்தி (6) இன் கீழ்க் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்போடு இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் நிபந்தனையை மீறி ஏதேனுமொரு செய்தித்தாள் அச்சிடப்பட்டவிடத்து அல்லது வெளியிடப்பட்ட விடத்து அல்லது பரப்பப்பட்டவிடத்து, அந்தச் செய்தித் தாளின் சொந்தக்காரன், முகாமையாளர், பதிப்பாசிரியர், வெளியிடுவோர் என்கின்ற எல்லோரும்,—மீறுகையின் விளைவாக அந்தப் பணிப்பு அழிக்கப்பட்டாலுஞ்சரி அழிக்கப்படாவிட்டாலுஞ்சரி,—குற்றமொன்றுக்காகத் தனித்தனியாகக் குற்ற வாளிகளாதல் வேண்டும்.

(13) இந்த ஒழுங்குவிதியில்—

(அ) "இயக்கப்படத் திரைச் சித்திரங்கள்" என்பது ஒலிச்சுவடியையும், அத்தகைய திரைச் சித்திரத்தை மற்றோர் பார்க்கும்படி செய்தல் தொடர்பாகத் திருப்பி உண்டாக்கும் நோக்கத்திற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட வேறு ஏதேனும் பொரு ளையும் உள்ளடக்கும் ;

(ஆ) "வெளியிடுதல்" என்பது, இயக்கப்படத் திரைச் சித்திரங்களோடு தொடர்பு பட்டு வருங்கால், அத்தகைய திரைச் சித்திரத்தைப் பொதுமக்களுக்குக் காட்டுதல் என்று பொருள்படுவதோடு, திரைச் சித்திரத்தை மேற்குறித்தவாறு பொது மக்களுக்குக் காட்டுதல் தொடர்பில் ஏதேனும் ஒலியைப் பொறிமுறையாக அல்லது மின்சார முறையாக மீள்வும் ஒலிக்கும்படி செய்தலையும் உள்ளடக்கும்;

(இ) "செய்தித்தாள்" என்பது ஏதேனும் இதழ், சஞ்சிகை, துண்டறிக்கை அல்லது வேறு வெளியீட்டினையும் உள்ளடக்கும் ;

(ஈ) "அச்சிடும் அச்சகம்" என்பது அச்சிடுதற்கு, சிலைப் பதிவு செய்தற்கு ஒளிப்படம் பிடித்தற்கு, அல்லது சொற்களைக் காணக்கூடிய முறையில் எடுத்துக்காட்டுவ தற்கான அல்லது திரும்பத் தோற்றுவித்தற்கான வேறு செயல் முறைக்குப் பயன்படுத்த உகந்த பொறியமைப்பு, உபகரணம் அல்லது பொறித் தொகுதி என்பவற்றையும் அல்லது அத்தகைய பொறியமைப்பு, உபகரணம் அல்லது பொறித்தொகுதியைச் சேர்ந்த ஏதேனும் அச்சு அல்லது வேறு பொருளையும் உள்ளடக்கும்.

தடைசெய்யப்பட்ட நிறுவகங்கள்

21. (1) ஏதேனும் நிறுவகம் ஒன்றின் தொடர்பில் அத்தகைய நிறுவகம் அல்லது அதன் உறுப்பினர் அல்லது அதனைச் சார்ந்தோர்—

(அ) பொதுமக்களின் பாதுகாப்புக்கு, பொது மக்களின் அமைதி பேணுதலுக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருதலுக்குக்குந்தகம் விளைக்கும் நோக்கங் களுக்காக ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் 13 ம் ஒழுங்குவிதியின் (2) ம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில் ; அல்லது இவ்வொழுங்கு விதிகளின் 19 ம் ஒழுங்கு விதியின் (அ) தொடங்கி (ஏ) வரையிலுள்ள உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள நோக்கங்களுள் எதற்காகவேனும் செயற்படுத்தப்படக்

கூடிய அல்லது பயன்படுத்தப்படக் கூடிய ஆபத்துண்டென்று முதலமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து அவர் கட்டளையொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் மூலம் அத்தகைய நிறுவகம் தடைசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஏதேனுமொரு நிறுவகம் தடை செய்யப்பட்டதாக வெளிப்படுத்தப்படுமிடத்து, இவ்ஒழுங்கு விதி, தடைசெய்யப்பட்ட நிறுவகம் செய்து வந்த அல்லது முன்பொருபோது செய்துவந்த செய்கைகளைச் செயலாலொத்த அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் வேறு நிறுவகங்களுக்கும் ஆளுக்கும் அல்லது ஆட்குழுவுக்கும் அல்லது ஆட்கூட்டத்திற் கும் அது அல்லது அவன் அல்லது அவர்கள் தடைசெய்யப்பட்ட நிறுவகம் என்றாற்போல ஏற்புடைய தாதல் வேண்டும்.

(3) எந்த வோராளும்—

(அ) தடைசெய்யப்பட்ட நிறுவகம் ஒன்றால் அல்லது அதன் உறுப்பினரொருவரால் அல்லது அதன் மேலாளால் வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் எழுதப்பட்ட விடயங்களை அல்லது அச்சிடப்பட்ட விஷயங்களைத் தோற்றுவிக்க, அச்சிட அல்லது பரப்ப அல்லது தோற்றுவிக்க அல்லது அச்சிட அல்லது பரப்ப எந்த ஒரு வகையிலேனும் தொடர்பு பட்டிருக்க ; அல்லது

(ஆ) தடைசெய்யப்பட்ட நிறுவகத்தால் அல்லது அதன் உறுப்பினரொருவரால் அல்லது அதன் மேலாளால், செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஏதேனுமொரு கட்டளையை, முடிவை, அல்லது போதனையை வேறோராளுக்கு எந்த வகையிலேனும் அறிவிக்க, அல்லது அறிவிக்க எத்தனிக்க ; அல்லது

(இ) நிறுவகத்தின் அல்லது நிறுவகவுறுப்பினரின் அல்லது நிறுவகமேலாளர்களின் கூட்டத்தைக் கூட்ட அல்லது கூட்டத்திற்கு சமுகமாயிருக்க ; அல்லது

(ஈ) நிறுவகத்தைச் சேரும்படி அல்லது அதற்கு உதவும்படி எந்தவோராளையும் அழைக்க அல்லது போதிக்க ; அல்லது

(உ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகக் காசாக அல்லது வேறு முறையாக உதவு தொகை உதவும்படி வேண்ட அல்லது உதவு தொகை சேர்க்க அல்லது மேல் மொழிந்த வாறு உதவு தொகை உதவ ; அல்லது

(ஊ) நிறுவகத்தின் மேலாள் என்ற முறையில் அல்லது நிறுவகத்தின் உறுப்பினர் என்ற முறையில் அல்லது அத்தகைய மேலாள் அல்லது உறுப்பினர் என்று வேறு ஆட்கள் நம்பும்படி செய்யும் அத்தகைய முறையில் ஏதேனும் செயலை அல்லது அலுவலைச் செய்ய அல்லது செய்ய எத்தனிக்க—

கூடாது.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது நிறுவகத்தின் உறுப்பினர் அல்லது நிறுவகத்திற்குக் கடன் கொடுப்பவர் விண்ணப்பஞ் செய்ததன் மேல், ஏதேனுமொரு நிறுவகம், இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகும் நிறுவகம் ஒன்று என்று உயர்நீதிமன்றத்துக்குத் தோன்றினால், நிறுவகம் வைத்திருந்த அல்லது நிறுவகத்திற்காக வைத்திருக்கப்பட்ட ஆதனம் நீதிமன்றத்தின் உத்தரவின்றிக் கையளிக்கப்படுதலைத் தடுத்தற்குத் தேவையான அத்தகைய கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கலாம் ; மேற்சொல்லப்பட்ட அத்தகைய ஆதனம் பற்றியும் நிறுவகத்தின் அலுவல்களைப் பற்றியும் விசாரணைநடாத்தி அறிக்கை தருமாறு பணிப்பதோடு நிறுவகத்தின் கருமங்களை முடித்துக் கட்டி அதைக் கலைப்பதற்கும், மேற்சொல்லப்பட்டபடியான அத்தகைய ஆதனத்தை அத்தகைய ஏதேனும் விசாரணை, அறிக்கை, நிறுவகத்தை முடித்துக் கட்டல், நிறுவகத்தைக் கலைத்தல் என்பன தொடர்பாக ஏற்பட்ட செலவுகளுக்குப் பயன்படுத்தற்கும், விண்ணப்பம் செய்த தேதியின் முன்னர் சட்டமுறைப்படி நிறுவகத்திற்கேற்பட்ட கடன் பொறுப்பை அல்லது விண்ணப்பம் செய்த தேதிக்குப் பின்னர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தோடு நிறுவகம் அடைந்த கடன் பொறுப்பை அடைத்தற்குப் பயன்படுத்துதற்கும் நியாயமானதும் நேர்மையானதும் என்று கருதும் அத்தகைய மேலதிகக் கட்டளைகளைப் பிறப்பிக்கவும் செய்யலாம் ; அத்துடன் மேற்சொன்னவாறு பயன்படுத்தும்படி நீதிமன்றத்தாற் பணிக்கப்படாத அத்தகைய ஆதனம் மேன்மை தங்கிய மகாராணியாருக்கு இழக்கப்படுதல் வேண்டும் என்றும் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) இந்த ஒழுங்குவிதியில் "மேலாளர்" என்ற சொல், ஏதேனும் நிறுவகம் தொடர்பாக வரும்போது நிறுவகத்தின் எந்த வோர் அலுவலர் என்றும், நிறுவகத்தின் மேலாட்சியில் அல்லது கட்டுப்படுத்தலில் பங்குகொள்ளும் யாரேனுமோர் ஆள், அல்லது நிறுவகத்தின் மேலாட்சியில் அல்லது அதனைக் கட்டுப்படுத்தலில் பதவிவகின்றவரான அல்லது பதவிவகிப்பவராகக் கொள்ளப்படும் யாரேனுமோராள் என்றும் பொருள்படும்.

சந்தேகிக்கப்படும் ஆட்களைக் கண்காணித்தல்.

22. (1) பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர், யாரேனுமோர் ஆள் தொடர்பாக அவ் ஆள்—

(அ) பொதுமக்களின் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதிக்கு அல்லது அத்தியாவசியச் சேவைகளை நடாத்துதற்குப் பாதகமான செயல்களைச் செய்வதிலிருந்து தடுப்பதற்கு ; அல்லது

(ஆ) இவ் வொழுங்குவிதிகளின் 13 ஆம் ஒழுங்குவிதியின் (2) ம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளைதற்கும், அல்லது 19 ஆம் ஒழுங்குவிதிக்கு அல்லது 21 ஆம் ஒழுங்குவிதியின் (3) ம் பந்திக்கு முரண்பாடான ஏதேனுமொரு வகையிற் செயலாற்றுவதிலிருந்து தடுப்பதற்கு

அவ்வாறு செய்தல் அவசியமென்று அபிப்பிராயப்படுமிடத்து அந்த நிரந்தரச் செயலாளர், பின்வரும் நோக்கங்களுளெல்லாவற்றிற்குமென அல்லது எதற்குமெனக் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம் :—

(i) அக்கட்டளையால், அல்லது அந்தக் கட்டளையிற்குறிப்பிடப்படும் அத்தகைய அதிகாரியால் அல்லது ஆட்களால் அவர் அநுமதிக்கப்படும் அவ்விதமே தவிர, ஆளொருவர், கட்டளையிற் குறிப்பிடக்கூடிய அத்தகைய (இலங்கையின்) பிரதேசங்களில் காணப்படாதிருத்தலைப் பெறுதலும்,

(ii) கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளிற்கு அத்தகைய காலங்களில் அத்தகைய முறையில் அவருடைய நடமாட்டங்களை அறிவிக்கும்படி பணித்தலும்,

என்பன.

(2) இவ் வொழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையை மீறி யாரேனுமோராள் ஏதேனுமொரு பிரதேசத்தில் இருந்தால், அல்லது அத்தகைய கட்டளையிற் பணிக்கப்பட்டபடி ஏதேனும் பிரதேசத்தை விட்டு நீங்கத் தவறினால், அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடிய ஏதேனும் நடவடிக்கைக்குப் பங்கமின்றி அவரை அந்தப் பிரதேசத்திலிருந்து யாரேனுமொரு பொலிசுத்தியோகத்தர் அல்லது பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனுமோராள் அகற்றலாம்.

மட்டுப்படுத்தற் கட்டளைகள்

23. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர், யாரேனுமோராள் தொடர்பாக அவ் ஆள்—

(அ) பொதுமக்களின் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதிக்கு அல்லது அத்தியாவசியச் சேவைகளை நடாத்துவதற்குப் பாதகமான செயல்களைச் செய்வதிலிருந்து தடுப்பதற்கு ; அல்லது

(ஆ) இவ்வொழுங்கு விதிகளின் 13 ஆம் ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்திகளின் ஏற்பாடுகளிலேதேனும் ஒன்றிற்கு அல்லது 19 ஆம் ஒழுங்குவிதிக்கு அல்லது 21 ஆம் ஒழுங்குவிதியின் 3 ஆம் பந்திக்கு முரண்படும் ஏதேனுமொரு வகையிற் செயலாற்றுவதிலிருந்து தடுப்பதற்கு,

அவ்வாறு செய்தல் அவசியமென்று அபிப்பிராயப்படுமிடத்து, நிரந்தரச் செயலாளர்—

(i) அத்தகைய ஆள், அவருறையும் வீட்டிற்கண்மையிலுள்ள பொலிசு நிலையத்தின் பொறுப்புத்தியோகத்தரின் அநுமதிபெறாது வீட்டைவிட்டு வெளியேறுவதைத் தடை செய்யவும், அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய சந்தருப்பங்களில் அல்லது அத்தகைய பொலிசுத்தியோகத்தரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய சந்தருப்பங்களில் அன்றி வேறெந்த ஆளும் அத்தகைய உறையுளுக்குள் நுழைவதையோ வெளிவருவதையோ தடைசெய்யவும் ;

(ii) குறிப்பிட்ட ஏதேனும் பொருளை அத்தகைய ஆள் வைத்திருப்பதை அல்லது பயன்படுத்துவதைத் தடை செய்ய அல்லது கட்டுப்படுத்தவும் ;

(iii) அத்தகைய ஆளின் வேலை அல்லது தொழில் தொடர்பாகவும், மற்ற ஆட்களோடு அவர் கொண்டுள்ள உறவு அல்லது செய்திப் போக்குவரத்துத் தொடர்பாகவும், செய்திகள் பரப்புதல், கருத்துக்கள் பிரசாரம் செய்தல் என்பவற்றோடுறவுள்ள செயல்கள் தொடர்பாகவும், அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய மட்டுப்பாடுகளை விதிக்கவும்,

கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

வெடிப்பொருள்கள் தீங்கு விளைக்கும் ஆயுதங்கள், தீங்குவிளைக்கும் பொருள்கள் என்பன.

24. (1) முதலமைச்சரால் கட்டளையின் மூலம் குறிப்பிடப்படும் இலங்கையின் ஏதேனுமோர் பிரதேசத்தில், சட்டப்படியான அதிகாரம் அல்லது நியாயமான காரணம் இல்லாமல் (இவற்றிற்கான சான்றளித்தல் அவரையே சார்ந்ததாய் இருத்தல் வேண்டும்) தன்னுடைய ஆட்சியில் அல்லது கட்டுப்பாட்டில் ஏதேனும் வெடிபொருளை அல்லது தீங்குவிளைக்கும் ஆயுதத்தை அல்லது தீங்கு விளைக்கும் பொருளை வைத்திருக்கும் எந்தவோராளும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் ஓர் ஆள் குற்றமொன்றிழைக்கிறாரென்று நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணம் இருப்பின், ஒரு பொலிசுத்தியோகத்தர், கோப்போறல் தரத்திற்குக் கீழ்ப்படாத இலங்கைத் தரைப்படை யுறுப்பினர் ஒருவர், தலைமைக் கடலோடியின் தரத்திற்குக் கீழ்ப்படாத இலங்கை அரச கடற்படை யுறுப்பினர், அல்லது கோப்போறல் தரத்துக்குக் குறையாத இலங்கை அரச ஆகாயப்படை யுறுப்பினர் ஒருவர், அந்த ஆளின் ஆட்சியிலிருக்கும் அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் வெடிபொருளை, தீங்கு விளைக்கும் ஆயுதத்தை அல்லது தீங்குவிளைக்கும் பொருளை அகற்றலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில்—

" தீங்குவிளைக்கும் பொருள் " என்பது தீப்பற்றக்கூடிய, எரித்தரிக்கக்கூடிய, அல்லது உயிர்ப்புள்ள ஏதேனும் பதார்த்தம் என்று பொருள்படும் ;

" தீங்குவிளைக்குமாயுதம் " என்பது குண்டு, அல்லது எறிகுண்டு, அல்லது குண்டைப்போல அல்லது எறிகுண்டைப்போலப் பயன்படுத்தற்காக அல்லது தேவைப்படுத்தற்காக அல்லது பயன்படுத்தும் அல்லது தேவைப்படுத்தும் எண்ணத்தோடு செய்யப்பட்ட வேறேதேனும் உபாயம் அல்லது சூழ்ச்சி அல்லது உடலுக்கு ஊறுபாடு விளைவிப்பதற்கென உபயோகிக்கப்படுத்தப்படக்கூடிய வேறு ஏதேனும் பொருள் என்று பொருள்படும்.

(4) முதலமைச்சரால் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கைப் பிரதேசமெதிலும், உத்தரவில்லாத் துப்பாக்கியைப் பாதுகாவலில் வைத்திருத்தல், ஆட்சியில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல் பற்றிக்கூறும் சுடுபடைக்கலக் கட்டளைச் சட்டத்தின் 22 ம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியமை காரணமாக அக்கட்டளைச் சட்டத்திற் கெதிரான குற்றத்தைச் செய்தமைக்காகக் குற்றவாளியாகக் காணப்படும் எந்தவோராளும், அக்கட்டளைச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஐயாயிரம் ரூபாவுக்குமேற்படாத குற்றப் பணம் விதிக்கப்பட அல்லது ஐந்தாண்டிற்கு மேற்படாத இரண்டிலொருவகைச் சிறைத்தண்டனை அளிக்கப்பட அல்லது அத்தகைய குற்றப்பணம் விதிக்கப்பட்டுச் சிறைத்தண்டனையும் அளிக்கப்படப் பாத்திரவாளியாதல் வேண்டும்.

25. (1) அத்தியாவசிய சேவைகளை நடாத்திவருதற்காக முழுமையாக அல்லது பிரதானமாகப் பயனபடுத்தப்படும் அல்லது அதிகாரத்துக்குட்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் அதிகாரமில்லாமல் நுழைவதைத் தடுத்தற்கான சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால், அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையொன்றின் மூலம், அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய விலக்குகளுக்கமைய எந்த வோராளும் அந்தக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய அதிகாரி அல்லது ஆளின் உத்தரவின்றி அந்தப் பிரதேசத்துக்குள், இடத்திற்குள் அல்லது வளவுக்குள் நுழைய அல்லது இருக்கக் கூடாதென ஏற்பாடு செய்யலாம். கட்டுப்படுத்தப்பட்ட இடங்கள்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை மீறியாரேனுமோராள் ஏதேனும் பிரதேசத்துக்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் இருப்பின், அவருக்கெதிராக எடுக்கப்படக் கூடிய வேறு நடவடிக்கைகளுள் எதற்கும் பாதகமின்றி அவர் அந்த இடத்திலிருந்து யாரேனும் பொலிசு உத்தியோகத்தரால் அல்லது தரைப்படை உறுப்பினரொருவரால் அல்லது இலங்கை அரச கடற்படையுறுப்பினரொருவரால் அல்லது இலங்கை அரச ஆகாயப்படையுறுப்பினரொருவரால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட வேறுயாருமானாால் அகற்றப்படலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில், ஏதேனும் அத்தியாவசிய சேவையோடு தொடர்புற்றுவரும் " தகுதிவாய்ந்த அதிகாரி " என்ற சொற்றொடர், அத்தேவையின் நோக்கங்களுக்காக முதலமைச்சரினால், பெயர்கொண்டு அல்லது பதவிப் பெயர்கொண்டு நியமிக்கப்படும் யாரேனுமோராள் என்று பொருள்படும்.

26. (1) பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர், யாரேனுமோர் ஆள் தொடர்பாக அவ் ஆள்— ஆட்களைத் தடுப்புக்காவலில் வைத்தல்.

(அ) பொது மக்களின் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதியை நிலைநாட்டுதற்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்திவருதற்குப் பாதகமான செயல்களைச் செய்வதிலிருந்து தடுப்பதற்கு ; அல்லது

(ஆ) அவ்வொழுங்குவிதிகளின் 13 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்திகளின் ஏற்பாடுகளிலேதேனும் ஒன்றிற்கு அல்லது 19 ஆம் ஒழுங்குவிதிக்கு அல்லது 21 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்திக்கு முரண்படும் ஏதேனுமொரு முறையில் செயலாற்றுவதிலிருந்து தடுப்பதற்கு,

அவசியமென்று அபிப்பிராயப்படின் அத்தகைய ஆளைப் பாதுகாவலில் வைக்கும்படி அல்லது பாதுகாவலிற் றடுத்துவைக்கும்படி நிரந்தரச் செயலாளர் கட்டளையிடலாம்.

(2) யாரேனும் பொலிசுத்தியோகத்தர் அல்லது இலங்கைத் தரைப் படையுறுப்பினர், அல்லது இலங்கை அரச கடற்படையுறுப்பினர் அல்லது இலங்கை அரச ஆகாயப்படையுறுப்பினர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைச் செயற்படுத்தவும், அந்நோக்கத்திற்குத் தேவையான அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தவும் உரிமையுடையராதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றித் தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒருவர், சட்டப்படியான காவலில் வைக்கப்பட்டவராகக் கருதப்பட வேண்டுமென்பதோடு பொலிசுப்பரிசோதகர் தலைவர் அதிகாரம் அளிக்கும் அத்தகைய இடத்திலும் அவரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமையவும் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும் ; மேலும் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சிறைச்சாலையொன்றில் அத்தகைய ஆள் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவிடத்து—

(அ) அக்கட்டளைச் சட்டத்தின் 9 ம் பகுதியின் ஏற்பாடுகளல்லாத மற்ற எல்லா ஏற்பாடுகளும்,

(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கைதிகளோடு தொடர்புகொள்ளுதல், கைதிகளைப் போய்ப்பார்த்தல் என்பவற்றை பற்றிக் கூறும் விதிகள் தவிர்ந்த வேனைய எல்லா விதிகளும்,

அத்தகைய ஆள் அக்கட்டளைச் சட்டத்தின் கருத்துப்படியான சிவில் கைதி ஒருவரானாற் போன்று, அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும் ;

ஆயின், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் அவ்வாறு செய்தல் உகந்ததென்று காணுமிடத்து—

(அ) இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாகும், சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலேதேனுமொன்று அல்லது அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளிலேதேனுமொன்று ஏற்புடையதாதல் ஆகாது என்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய திருத்தங்கள் அல்லது திரிபுகளுக்கமைய ஏற்புடையதாதல் வேண்டும் என்று கட்டளையாற் பணிக்கலாம் ; மேலும்

(ஆ) நிரந்தரச் செயலாளர் காலத்திற்குக் காலம் பணிக்கக் கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய இடத்திலும் நேரத்திலும், அத்தகைய ஆளைப் போய்ப் பார்க்கவும் அத்தகைய ஆளோடு தொடர்பு கொள்ளவும் அநுமதி அளிக்கலாம்,

(4) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றோ பலவோ இருத்தல் வேண்டும் ; இவ்வொழுங்கு விதியின் கீழ் ஒருவருக்கெதிராகவிடுக்கப்பட்ட கட்டளையொன்றால் வருத்தமுறும் ஆள் எவரும் தமது ஆட்சேபனைகளை மேற்குறிப்பிடப்பட்ட குழுவிற்கு அறிவிக்கலாம்.

(5) இவ்வொழுங்குவிதியின் கீழ்க் கட்டளைவிடுக்கப்பட்ட யாரேனும் ஒருவர், அக்கட்டளை தொடர்பாகத் தமது முறையீடுகளை எழுத்து மூலத்தில் முதலமைச்சருக்குத் தெரிவிப்பதற்கான நடைமுறை வாய்ப்புக்கள் நேரகாலத்தோடு அவர்க்கு அளிக்கப்படும் எனவும், அத்தகைய முறையீடுகள் செய்யப்படினுஞ் சரி செய்யப்படாவிடினுஞ் சரி, மேற்சொல்லப்பட்ட குழுவிற்கு தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்தற்கு அந்த ஆளுக்கு உரிமையுண்டு எனவும் உறுதி செய்து கொள்ளுதல் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் கடமையாதல் வேண்டும். அத்தகைய ஆட்சேபனைகளைக் கேட்டு முடிவு செய்தல் தொடர்பான விதிகள் மகாதேசாதிபதியால் ஆக்கப்படலாம்.

(6) மேற்சொன்ன அத்தகைய ஆட்சேபனைகளை ஆராய்தற்கென கூட்டப்படும் ஆலோசனைக் குழு எதற்கும், மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரே தலைமைவகித்தல் வேண்டும் ; இந்த ஒழுங்குவிதியின் கீழ் எந்தெந்தக் காரணங்களுக்காக அவர்க்கெதிராகக் கட்டளைவிடுக்கப்பட்டது என்பதை ஆட்சேபனைவிடுபவர்களுக்கறிவித்து, நியாயத்தை எடுத்துரைப்பதற்குப் போதுமானவை என தலைவர் அபிப்பிராயப்படும் அத்தகைய விபரங்களைக் கொடுத்தல் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(7) ஆலோசனைக்குழு மூன்று ஆட்களை உடையதாயிருக்குமிடத்து, ஏதேனுமொரு கூட்டத்தை கூட்டுவதற்கு வேண்டிய கூட்டநடப்பெண் இரண்டாயிருத்தல் வேண்டும் ; மூன்றிற்கு மேற்பட்ட ஆட்களை உடையதாய் இருக்குமிடத்துக் கூட்ட நடப்பெண் மூன்றாயிருத்தல் வேண்டும்.

(8) மேற்சொன்ன அத்தகைய ஏதேனும் ஆட்சேபனை தொடர்பான ஆலோசனைக் குழுவின் அறிக்கை, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் முன் வைக்கப்படுதல் வேண்டும் ; அவர் அதை ஆராய்ந்த பின்னர், ஆட்சேபனைகள் எக்கட்டளை தொடர்பாக எழுப்பப்பட்டனவோ அக்கட்டளையை அழிக்கலாம்.

(9) பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர், இவ்வொழுங்குவிதியின் (1) ம் பந்தியின் கீழான ஒரு கட்டளை எவ் ஆள் தொடர்பாக விடுக்கப்பட்டதோ அவ் ஆள் இவ்வொழுங்குவிதிகளின் 21 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்த் தடைசெய்யப்பட்ட நிறுவகத்தின் உறுப்பினரென்று அல்லது உறுப்பினராய் இருந்தவரென்று, தம்மால் ஐயுறப்படுவதாக எழுத்து மூலத்தில் சான்றுரைக்குமிடத்து, இவ்வொழுங்குவிதியின் (4) ம், (5) ம், (6) ஆம், (7) ஆம், (8) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் அத்தகைய ஆட்களுக்கு ஏற்புடையனவாகா.

(10) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழான கட்டளையைப் பின்பற்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள எந்த ஆளுக்கும் நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு ஏற்புடையதாதலாகாது.

(11) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழான ஒரு கட்டளை அல்லது இவ்வொழுங்கு விதியின் (9) ஆம் பந்தியின் கீழான சான்றிதழ், எக்காரணத்தினைக்கொண்டும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படலாகாது.

*ஆதனத்தைத் தேவைக்கெடுத்தலும் உரிமையாக்கலும்.*

27. (1) இனிமேல் இதன் கண் ஏற்பாடுசெய்யப்படுவதற்கமைய, ஒரு தகுதிவாய்ந்த அதிகாரி பொதுமக்கள் பாதுகாப்பிற்காக அல்லது பொதுவொழுங்கை நிலைநாட்டுவதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்திவருதற்கு அவ்வாறு செய்தல் அவசியமானதென்று அல்லது உகந்ததென்று அபிப்பிராயப்படின் அவர் (இலங்கையில் வாசமுள்ள எவரேனும் ஆளொருவருக்குச் சொந்தமான அல்லது இலங்கையிலுள்ள அல்லது இலங்கைத் துறை எதிலுமுள்ள எந்த வொரு கலம் அல்லது விமானமும் உட்பட) இலங்கையிலுள்ள எந்தப் பொருளையும் தேவைக்கெடுக்கலாம் ; அத்தகைய தேவைக்கெடுத்தல் தொடர்பாக அவசியமென்று அல்லது உகந்தது என்று தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படும் அத்தகைய பணிப்புக்களையும் கொடுக்கலாம்.

*அத்தியாயம் 192*
*அத்தியாயம் 365*

(2) தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் இவ்வொழுங்குவிதியின் (1) ம் பந்தியின் கீழ் ஏதேனும் ஆதனத்தைத் தேவைக்கெடுக்குமிடத்து அல்லது முடியின் தனித்தத்துவத்தினை பண்பால் பிரயோகிக்கக்கூடிய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் காரணமாக அல்லது தந்திப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் 7 ம் பிரிவால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தால் அல்லது ஆகாயப்போக்குவரத்துச் சட்டத்தின் 7 ஆம் பிரிவால் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரின் ஆட்சியில் அல்லது அவர் கையாள்வதற்கானதாய் (காணியல்லாத) ஏதேனும் ஆதனம் இருக்குமிடத்து, பொதுமக்களின் பாதுகாப்பிற்கு, பொது ஒழுங்கினை நிலைநாட்டற்கு அல்லது சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்திவருதற்கு உகந்ததென்று தகுதிவாய்ந்த அதிகாரி நினைக்கும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் அத்தகைய முறையினும் அத்தகைய ஆதனத்தைப் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம், அல்லது பயன்படுத்தும்படி அல்லது கையாளும்படி அதிகாரமளிக்கலாம் ; மேலும் அத்தகைய ஆதனத்தை, அத்தகைய ஆதனம் அதிகாரியின் சொந்தப் பொருளாகவிருந்தாற்போலவும், அவ்வாதனம் ஈட்டினால், அடைவினால், சோந்தையினால் அல்லது வேறு பொறுப்பினால் பாதிக்கப்படாதிருந்தாற்போலவும், தன் வசம் வைத்திருக்கவும் விற்கவும் வேறு வகையாகக் கையாளவும் செய்யலாம் ; இன்னும், தேவைக்கெடுக்கப்பட்ட ஆதனம் மரக்கலம், வாகனம், வானூர்தி, அகழ்வான், பாரம்தூக்கி, கமத்தொழிற் கருவி அல்லது கைத்தொழிற் பொறித் தொகுதியாகவிருக்குமிடத்து, அவற்றின் சொந்தக்காரருக்கு, தகுதிவாய்ந்த அதிகாரி, இந்த ஒழுங்குவிதியைப் பின்பற்றி, அதைத் தமக்கு உரித்தாக்கிவிட்டார் என்று கூறும் அறிவித்தல் ஒன்றனைக் கொடுத்தன் மூலம் உரித்தாக்கலாம்.

(3) ஏதேனும் மரக்கலம், வாகனம், வானூர்தி அகழ்வான், பாரம்தூக்கி கமத்தொழிற் கருவி அல்லது கமத்தொழிற் பொறித்தொகுதியின் சொந்தக்காரருக்கு இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழான உரித்தாக்கல் பற்றிய அறிவித்தல் விடுக்கப்படுமிடத்து, அவ்வறிவித்தல் கொடுக்கப் பட்ட நாளின் தொடக்கத்தில்—

(அ) மரக்கலம், வாகனம், வானூர்தி, அகழ்வான், பாரம்தூக்கி, கமத்தொழிற் கருவி அல்லது கமத்தொழிற் பொறித் தொகுதியாகியன ஈடு, அடகு, சோந்தை அல்லது வேறும் பொறுப்புகளிலிருந்து நீங்கித் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு உரிமையானவையாதல் வேண்டும் ; அத்தோடு

(ஆ) தேவைக்கெடுத்தற் காலம் முடிவடைதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (1) ம் பந்தியால் வழங்கப்பட்ட தத்துவங்களைத் திறமையான முறையில் பிரயோகிப்பதற்கு அவ்வாறு செய்தல் அவசியமென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால், இலங்கை முழுமை தொடர்பாக, அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் ஏதேனும் பிரதேசம் தொடர்பாக விடுக்கப்படும் கட்டளை ஒன்றன் மூலம் :—

(அ) அக்கட்டளை நடைமுறைக்கு வரும் காலத்தில், அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் பிரதேசத்தில் உள்ள ஏதேனும் வளவில் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஏதேனும் பொருளைத் தம்முடைய ஆட்சியில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எந்த ஆளும், அந்தப் பொருள் அந்த வளவிலிருந்து, அகற்றப் படுதல், அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் ஆளால் அல்லது அதிகாரியால் அநுமதிக்கப்படும் வரை, அந்தப் பொருளை அந்த வளவிலிருந்து அகற்றலாகாது, அல்லது அகற்றவழி செய்யவோ அகற்ற அனுமதி அளிக்கவோ கூடாது என்று பணிக்கலாம் ;

(ஆ) அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு, அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய தேதியில் மேற்சொல்லப்பட்ட படியான ஏதேனும் பொருள், சொல்லப்பட்ட பிரதேசத்திலுள்ள வளவில் இருந்ததா அல்லது இருக்குமா என்பதையும், அப்படியிருக்குமாயின் அக்கட்டளை பணிக்கும் அந்தத் தேதியில் அந்த வளவில் இருக்கும் பொருளின் எண்ணிக்கை அல்லது தொகை என்ன என்பதையும் கூறும் அல்லது உத்தேச மாகக் கணக்கிடும் எழுத்துமூல வெளிப்படுத்தலை அனுப்பும்படி சொல்லப்பட்ட பிரதேசத்திலுள்ள ஏதேனுமொரு வளவின் சொந்தக்காரரை அல்லது அதிற் குடியிருப்பவரைப் பணிக்கலாம் ; அல்லது

(இ) காலத்திற்குக் காலம் தமக்குச் சொந்தமாக அல்லது தம்முடைய ஆட்சியில் அல்லது பாதுகாவலில் அல்லது தமது ஆட்சியின் அல்லது பாதுகாவலின் கீழ் அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழ், அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய ஏதேனும் வாகனத்தை மேற்சொல்லப்பட்ட கட்டளையிற் குறிப்பிடப்படும் பிரதேசத்தில் வைத்திருக்கும் ஆட்களை, அவ்வாகனங்களைப் பற்றியும் (மாற்றுறுப்புகள் உட்பட) அவற்றின் பாகங்களைப் பற்றியும் துணைப்பகுதிகளைப் பற்றியும் கட்டளையிற் குறிப்பிடப்படக் கூடிய அத்தகைய விபரங்களை அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு எழுத்துமூலத்திற் கொடுக்கும்படி பணிக்கலாம்.

(5) நாணயம், பொன், பிணைப்பொருள்கள் அல்லது மாற்றுமுறிகள் ஆகியன தொடர்பாக இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளால் அளிக்கப்படும் தத்துவங்கள் பிரயோகிக்கப்படா.

(6) இவ்வொழுங்குவிதியில், பொருள்கள் தொடர்பான எந்தக் குறிப்பிடும், பதார்த்தங்கள் வாகனங்கள் அல்லது விலங்குகளையும் குறிப்பீடு செய்வதை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர், பொதுமக்கள் பாது காப்புக்கருதி அல்லது பொது அமைதிபேணுதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அத்தியாவசிய மான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்திவருதல் என்பவற்றுக்காக அவ்வாறு செய்தல் அவசியமென்று அல்லது உகந்ததென்று அபிப்பிராயப்படின் இலங்கையிலுள்ள எந்த அசைவற்ற ஆதனத்தையும் தேவைக்கெடுக்கலாம். அந்தத் தேவைக்கெடுத்தல் தொடர்பாக அவசியமன்று அல்லது உகந்ததென்று அவர்க்குத் தோன்றும் அத்தகைய பணிப்புகளையும் விடுக்கவும் செய்யலாம்.

(8) இவ்வொழுங்குவிதியின் 7 ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைக்கெடுக்கப்படுமிடத்து, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் அவ் வாதனத்தை, பொதுமக்கள் பாதுகாப்பு, அல்லது பொது அமைதி பேணுதல் அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு இன்றியமையா வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருதல் என்பனவற்றை முன்னிட்டுத் தாம் உகந்ததென்று நினைக்கும் அத்தகைய நோக்கங்களுக்கு அத்தகைய முறையில் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம், அல்லது பயன்படுத்தும்படி அல்லது கையாளும்படி அதிகாரமளிக்கலாம்.

(9) பொலிசுப்படையின் எந்த உத்தியோகத்தரும் அரசாங்கத்தின் எந்த உத்தியோகத்தரும் இந்த ஒழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளால் அளிக்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிக்கும் எந்த ஆளுக்கும் துணை நிற்கும்படியும் உதவும்படியும் வேண்டப்பட்டுழி அவ்வாறு செய்தல் வேண்டும்.

(10) இந்தவொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது—

(அ) பிரயாணிகளின் போக்குவரத்துச் சேவையை நடாத்துதற்குத் தேவையான வாகனங்களை (மாற்றுறுப்புக்கள் உட்படத்) தேவைக் கெடுத்தல் தொடர்பாகவும், பொது மக்கள் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதிக்கு அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்திவருவ தற்குத் தேவைப்படும் மரக்கலங்களைத் தேவைக்கெடுத்தல் தொடர்பாகவும், வரும் போது, முதலமைச்சரால் பெயர்குறித்து அல்லது பதவி குறித்து அப்படியான வராக நியமிக்கப்படும் ஓர் ஆள் அல்லது அவ்வாறு நியமிக்கப்படும் ஒவ்வோர் ஆளும் என்று பொருள் படும் ;

(ஆ) உணவுப்பொருள்களை ஏற்றிச் செல்லற்குத் தேவைப்படும் வாகனங்களை (மாற்று றுப்புக்கள் உட்படத்) தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்போது, முதலமைச்ச ரால் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஓர் ஆள் அல்லது அவ்வாறு நியமிக்கப்படும் ஒவ்வோர் ஆளும் என்று பொருள் படும் ;

(இ) உடனல சேவைகள், மருத்துவ சேவைகள் என்பன அளித்தற்காகத் தேவைப்படும் பொருள்களை (வாகனங்கள் உட்படத்) தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும் போது முதலமைச்சரால் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து அப்படியான வராக நியமிக்கப்படும் ஓர் ஆள் அல்லது ஒவ்வோர் ஆளும் என்று பொருள்படும் ;

(ஈ) பொது அமைதி நிலைநாட்டுதற்குத் தேவைப்படும் வாகனங்களைத் தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்போது தரைப்படை ஏவுநர், கடற்படை முதல்வன், ஆகாயப் படை ஏவுநர், அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைவர், என்று பொருள்படும் ;

(உ) கமத்தொழில் நோக்கங்களுக்குத் தேவையான பொருள்களைத் தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்போது முதலமைச்சரால் பெயர்குறித்து அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஓர் ஆள் அல்லது ஒவ்வோராளும் என்று பொருள்படும் ;

(ஊ) வேறேதேனுமொரு பொருளைத் தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்போது முதலமைச்சரால், பெயர் அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப் படும் ஆள் அல்லது ஒவ்வோராளும் என்று பொருள்படும்.

(11) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென "பொருள்" என்ற சொல் பெற்றேலியத்தை அல்லது பெற்றேலியத்தின் ஏதேனும் விளைபொருளை அல்லது பக்க விளைபொருளை உள்ளடக்கும்.

*வதந்திகளையும் பொய்க் கூற்றுக் களையும் வெளி விடுதல்*

28. பொதுமக்களுக்கு ஏக்கம் ஏற்படுத்தக்கூடிய எந்த வதந்தியையும் அல்லது பொய்க் கூற்றையும் எவரும் வெளியிடுதலாகாது.

*பொது இடங்களில் சொற்பொழிவு ஆற்றுதல்.*

29. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பிரதேசமெதிலும் அமைந்துள்ள பொது இடத்தில், பொது அமைதியைமீறச் செய்யக்கூடிய சொற்பொழிவை எந்த ஆளும் பேசுதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியில் "பொது இடம்" என்பது ஏதேனும் நெடுவழி, பொதுப் பூங்கா அல்லது தோட்டம், கடற்கரை என்றும், ஏதேனும் பொதுப்பாலம், தெரு, ஒழுங்கை, ஒற்றையடிப் பாதை, சதுக்கம், மன்றம், சந்து அல்லது பொதுவழியாயுள்ள அல்லது பொதுவழியல்லாத போக்கு என்றும் பொருள்படுவதோடு, காசுகொடுத்தோ அல்லாமலோ பொதுமக்கள் போகக்கூடிய ஏதே னும் திறந்த வெளியையும் உள்ளடக்கும்.

*துண்டுத்தாள் முதலியவற்றைப் பரப்புதல்.*

30. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் பிரதேசமெதிலும், பொலிசுப்பரிசோதகர் தலைவரின் அல்லது அது சார்பாகப் பொலிசுப் பரிசோதகர் தலைவரால் அதிகார மளிக்கப்பட்ட ஆளின் உத்தரவின்றி எந்த ஆளும், பொதுமக்கள் காணக்கூடிய ஏதேனும் இடத்தில் அல்லது பொதுமக்களின் மத்தியில் ஏதேனும் சுவரொட்டியை அல்லது விளம்பரத்துண்டை அல்லது துண்டுத் தாளை ஒட்டவோ வழங்கவோ கூடாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ம் பந்தியின் கீழ் ஆளொருவராற் புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றமொன்று தொடர்பான எந்த நடவடிக்கையிலும், அத்தகைய ஆள், பொதுமக்கள் காணக் கூடிய ஏதேனும் இடத்தில் ஏதேனும் சுவரொட்டியை அல்லது விளம்பரத்துண்டை அல்லது துண்டுத் தாளை ஒட்ட அல்லது பொதுமக்கள் மத்தியில் அவற்றைப் பகிரப் பொலிசுப் பரிசோதகரிடமிருந்த அல்லது அது சார்பாக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு உத்தியோகத்தரிடமிருந்து அநுமதி பெறவில்லை என்று கூறுவதான, பொலிசுப் பரிசோதகர் தலைவர் கைப்பட்ட சான்றிதழ், பொலிசுப் பரிசோதகர் தலைவரின் கையெழுத்துப் பற்றிய மெய்ப்பிப்பு இல்லாமலே சான்றாக ஏற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும் ; அத்தோடு அத்தகைய சான்றிதழிற் கூறப்பட்டிருக்கும் நிகழ்வுகளுக்கு அதுவே முதற்றோற்றமான சான்றுமாதல் வேண்டும்.

*தெருக்கள் புகை வண்டிப் பாதை முதலியவற்றை மறித்தலும் உடைத்தலும்.*

31. முதலமைச்சரால் கட்டளையிற் குறிப்பிடப்படும், இலங்கையின் பிரதேசம் எதிலும், எந்த வோராளும் சட்டப்படியான அதிகாரமின்றி, ஏதேனும் பொதுத்தெரு, பாலம் அல்லது மதகு அல்லது புகைவண்டிப்பாதை அல்லது பொதுத்தெருப் போக்குவரத்து வாகனத்தைத் தடைசெய் யவோ சேதப்படுத்தவோ கூடாது.

32. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும், இலங்கையின் பிரதேசமெதிலும் எந்தவோராளும், வேறுயாரேனுமோராள் உறையும் அல்லது வேலைசெய்யும் அல்லது தொழில் நடாத்தும் அல்லது தற்செயலாக தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்குக் கிட்ட அல்லது இடத்திற்குக் கிட்ட, அந்த வீட்டில் அல்லது இடத்தில் உள்ள யாரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அப்படியான ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டிலிருந்து வெளிக்கிளம்புவதைத் தடைசெய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்துநிற்கக்கூடாது. மிரட்டல் முதலிய வற்றைத் தடுத்தல்.

(2) இவ்வொழுங்குவிதியில் " மிரட்டல் " என்ற சொல் ஓர் ஆளினது மனத்தில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள யாரேனுமுறுப்பினருக்கு அல்லது தம்மிற் சார்ந்திருக்கும் யாரேனுமொருவருக்குத் தீங்கு விளைந்து விடுமோ என்ற ஞாயமான ஐயவச்சத்தை ஆக்குதல் அல்லது யாரேனுமொருவருக்கு அல்லது ஆதனத்துக்குத் தீங்குவிளைந்துவிடுமோ என்ற ஞாயமான அச்சத்தை ஆக்குதல் என்று பொருள்படும் ; " தீங்கு " என்ற சொல் ஆளொருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வேறு வருமான வாய்கள் தொடர்பான தீங்குகளை உள்ளடக்குதலோடு நடவடிக்கை எடுக்கக்கூடிய குற்றங்களையும் உள்ளடக்கும்.

33. (1) முதலமைச்சரால் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் ஏதேனும் பிரதேசத்தில் பொதுமக்கள் பாதுகாப்பையும் பொது அமைதியையும் உறுதிப்படுத்துவதற்காக எந்தவோராளிடமுமுள்ள எந்தவொரு துவக்கும் அல்லது வெடிபொருளும் தாம் துணியும் அத்தகைய பாதுகாப்பிடத்திற் கொடுக்கப்பட்டு வைக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம். துவக்குகளும் வெடிபொருள் களும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ்ப் பரிசோதகர் தலைவரால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பில் பெயர் அல்லது பதவி குறித்து அது சார்பாகக் குறிப்பிடப்பட்ட எந்த ஆளும் அத்தகைய பணிப்பை நிறைவேற்றலாம். அத்தகைய பணிப்பை நிறைவேற்றும் நோக்கங்களுக்கென அத்தகைய ஆள் வேறு ஆளின் அல்லது ஆட்களின் துணையோடு எந்தவொரு வளவு அல்லது வீட்டிற்குள்ளும் நுழையலாம் ; அத்தகைய வளவுக்குள் அல்லது இடத்திற்குள் நுழையும் நோக்கத்திற்கென ஏதேனும் வெளிக்கதவை அல்லது உட்கதவை அல்லது வெளிச் சாளரத்தை அல்லது உட்சாளரத்தைத் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம் ; மேலும் ஏதேனும் துவக்கு அல்லது வெடிபொருள் இருப்பதாக அத்தகைய ஆள் சந்தேகிக்கும் அத்தகைய ஏதேனும் வைப்பிடம் அல்லது சேமிப்பிடத்தையும் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ம் பந்தியின் கீழ்ப் பொலிசுப் பரிசோதகர் தலைவரால் விடுக்கப்பட்ட பணிப்பிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் துவக்கை அல்லது வெடிபொருளை எந்தவோராளும் மறைக்கவோ, அத்தகைய் பணிப்புநிறைவேற்றப்படுதலைத் தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலைச் செய்யவோ கூடாது.

(4) (1) ம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் இவ்வொழுங்குவிதி நடைமுறையிலிருக்கும் காலத்துள்—

(அ) எந்தவோரரசாங்க அதிபரும் அல்லது எந்தவோருதவியரசாங்கவதிபரும் அல்லது அத்தகைய யாரேனுமோரதிபரால் துவக்கு வகைக் கட்டளைச் சட்டத்தின் 51 ம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எந்தப் பேராளரும் அந்தக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கென உத்தரவுப்பத்திரமளிக்கும் அதிகாரியாக இருத்தலாகாது ; அக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்கான உத்தரவுப்பத்திரம் அளிக்கும் அதிகாரி நிரந்தரச் செயலாளராகவே இருத்தல் வேண்டும் ; அத்தோடு

(ஆ) எந்த அரசாங்க அதிபரும், மேலதிக அரசாங்க அதிபரும், உதவி அரசாங்க அதிபரும் அல்லது மேலதிக உதவி அரசாங்க அதிபரும், வெடிபொருட்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் எழுத்து மூலத்தில் அத்தகைய யாரேனும் அதிபரால் அது சார்பாக அதிகாரம்ளிக்கப்பட்ட எந்த அரசாங்க உத்தியோகத்தரும் அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென உத்தரவுப்பத்திரம் அளிக்கும் அதிகாரியாக இருத்தல் ஆகாது ; அச்சட்டத்தின் நோக்கங்களுக்கான உத்தரவுப்பத்திரமளிக்கும் அதிகாரி நிரந்தரச் செயலாளராதல் வேண்டும்.

ஆயின், இப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகள், நிரந்தரச் செயலாளரை, துவக்குவகைச் கட்டளைச் சட்டத்தின் கீழான உத்தரவுப்பத்திரம் அளிக்கும் அதிகாரியென்ற முறையில் அவர் யாரேனும் அரசாங்க அதிபரை அல்லது உதவி அரசாங்க அதிபரை அக்கட்டளைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ்த் தமது பேராளராக நியமிப்பதைத் தடுப்பதாகக் கருதப்படலாகா ;

இன்னும், இப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகள், நிரந்தரச் செயலாளரை, வெடிபொருட்கட்டளைச் சட்டத்தின் கீழான உத்தரவுப்பத்திரமளிக்கும் அதிகாரியென்ற முறையில், அவர் யாரேனும் அரசாங்க உத்தியோகத்தரை அச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ்த் தமது பேராளராக நியமிப்பதைத் தடுப்பதாகக் கருதப்படலாகா.

(5) துவக்குவகைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், துவக்கு வியாபாரம் செய்ய அநுமதியளிக்கப்பட்ட யாரேனுமொரு வியாபாரி இலங்கைக்குள் இறக்குமதிசெய்யும் அல்லது விற்பதற்கென வெளிக்காட்டியிருக்கும் அல்லது விற்பதற்காக வைத்திருக்கும் எந்த வொரு துவக்கையும் கைப்பற்றும்படி தாம் முடிவு செய்யும் அத்தகைய இடத்தில் அதை வைத்திருக்கும்படியும் நிரந்தரச் செயலாளர் கட்டளைவிடுக்கலாம்.

(6) இவ்வொழுங்குவிதியின் (5) ம் பந்தியின் கீழ் நிரந்தர செயலாளர் விடுக்கும் கட்டளை குறிக்கும் கருவிகளை எந்த ஆளும் மறைக்கவோ அத்தகைய கட்டளை நிறைவேறுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலைச் செய்யவோ கூடாது.

(7) வெடிபொருட் சட்டத்தின் கீழ் அநுமதி அளிக்கப்பட்ட யாரேனுமோர் ஆள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் அல்லது இலங்கையில் தயாரிக்கும் அல்லது இலங்கையில் விற்பதற்கென வெளிக்காட்டியிருக்கும் அல்லது விற்பதற்கென வைத்திருக்கும் வெடிபொருள்களை, அல்லது அந்தச் சட்டத்தின் கீழ் வெடிபொருட்கள் தயாரிப்பவரின் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும்படி அநுமதி யளிக்கப்பட்ட யாரேனுமோராளிடமுள்ள வெடிபொருட்களைக் கைப்பற்றும்படியும் அவற்றைத் தாம் துணியும் அத்தகைய இடத்திற்கு எடுத்துச் சென்று வைத்திருக்கும்படியும் நிரந்தரச் செயலாளர் கட்டளையிடலாம்.

(8) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின் கீழ் நிரந்தரச் செயலாளர் விடுக்கும் கட்டளை குறிக்கும் வெடிபொருளை எந்த ஆளும், மறைக்கவோ அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலை செய்யவோ கூடாது.

(9) இவ்வொழுங்கு விதியின் (5)அல்லது (7) ஆம் பந்தியின் கீழ் நிரந்தரச் செயலாளரால் விடுக்கப்படும் கட்டளையில் அது சார்பாகக் குறிப்பிடப்படும் எந்தவோராளும் அத்தகைய கட்டளையை நிறைவேற்றலாம். அத்தகைய கட்டளையை நிறைவேற்றும் நோக்கத்துக்கென அத்தகைய ஆள் எவரேனும் வேறு ஆளின் அல்லது ஆட்களின் உதவியுடன் அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்படும் வளவுக்குள் அல்லது இடத்துக்குள் நுழையலாம். அத்தகைய வளவுகட்குள் அல்லது இடத்திற்குள் நுழையும் நோக்கத்திற்கென ஏதேனும் வெளிக்கதவை அல்லது உட்கதவை அல்லது வெளிச் சாளரத்தை அல்லது உட்சாளரத்தைத் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம். மேலும் அத்தகைய ஆள் ஏதேனும் துவக்கு அல்லது வெடி பொருள் வைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கும் ஏதேனும் வைப்பிடம் அல்லது சேமிப்பிடத்தையும் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்.

(10) (அ) துவக்கு வகைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின் அதிகாரத்தால் துவக்கு வியாபாரம் செய்யும் ஒவ்வொருவரும், அல்லது

(ஆ) வெடிபொருட் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின் அதிகாரத்தால் வெடிபொருட்களை இறக்குமதி செய்பவராக அல்லது தயாரிப்பவராக அல்லது விற்பவராக அல்லது வழங்குபவராக உள்ள ஒவ்வொருவரும், அல்லது

(இ) வெடிபொருட் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டையுடைய ஒவ்வொருவரும்—

நிரந்தரச் செயலாளர் குறிப்பிடக்கூடிய அத்தகைய கால எல்லைக்குள் நிரந்தரச் செயலாளர் காலத்திற்குக் காலம் பணிக்கும் அத்தகைய திரட்டுக்களை அவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(11) இவ்வொழுங்குவிதி வலுவுடையதாயிருக்கும் காலத்தில் (1) ம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனுமொரு பிரதேசத்தில் துவக்குவகைக் கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவும் வெடிபொருட் சட்டத்தின் 10 ஆம், 22 ஆம் பிரிவுகளும் அந்தப் பிரதேசத்தில் நடைமுறையி லிருத்தலாகாது.

(12) இவ்வொழுங்குவிதியில்—

" துவக்கு " என்பது துவக்குவகைச் சட்டத்திலுள்ள பொருளையே கொண்டிருக்கும்; அத்தோடு

" நிரந்தரச் செயலாளர் " என்பது துவக்கு வகைச் கட்டளைச்சட்டம் சம்பந்தமாக உண்ணாட்டலுவல் அமைச்சின் நிரந்தரச் செயலாளரென்றும், வெடிப்பொருள் சட்டம் சம்பந்தமாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் என்றும் பொருள்படும்.

பெற்ரோல் விற்பனையை அல்லது வழங்கலை மட்டுப்படுத்தலும் கட்டுப்படுத்தலும்.

34. (1) முதலமைச்சரால் கட்டளை மூலம் குறிப்பிடப்படும் எந்தவொரு பிரதேசத்தினும், சில்லறை வியாபாரப் பெற்ரோல் நிலையத்துக்குப் பொறுப்பாயுள்ள ஓர் ஆளால் செய்யப்படும் பெற்ரோல் வழங்கல் அல்லது விற்பனையின் கட்டுப்படுத்தப்படுதலையும் மட்டுப்படுத்தலையும் உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்கெனத் தேவையென்று தோன்றும் அத்தகைய எல்லாப் பணிப்புகளையும், தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் காலத்திற்குக் காலம் விடுக்கலாம்; அத்தகைய பணிப்புகளுக்கு இணங்குவது அந்த ஆளின் கடமையாகும்.

(2) ஏதேனும் சில்லறை வியாபாரப் பெற்ரோல் நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள ஓர் ஆளால் பெற்ரோல் விற்கப்படுதல் அல்லது வழங்கப்படுதல் தொடர்பான இவ் வொழுங்குவிதியின் (1) ம் பந்தியின் கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரால் விடுக்கப்படும் பணிப்புகள், அத்தகைய ஆள் அந்தப் பெற்ரோல் நிலையத்தில் ஏலவே அத்தகைய அதிகாரியின் அங்கீகாரம் பெற்ற ஆட்களுக்கன்றி வேறெவர்க்கும் பெற்ரோல் கொடுத்தலை அல்லது விற்றலை, அல்லது குறித்தவேதேனும் வகுப்பை அல்லது விதத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு ஏதேனும் பெற்ரோல் கொடுப்பதைத் தடைசெய்யும் ஏற்பாடுகளையும், அந்த நிலையத்தில் பெற்ரோல் கொடுக்கப்படுதலை அல்லது விற்கப்படுதலை மட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் தேவையான அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பான ஏற்பாடுகளையும் கொண்டிருக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில் " பெற்றோல் " என்ற சொல் பெற்றோல் (வழங்கற்கட்டுப்பாட்டுக்) கட்டளைச் சட்டத்தில் பெற்றோல் என்ற சொல்லுக்குக் கூறப்படும் வரைவிலக்கணத்தின் பொருளையே உடையதாயிருத்தலோடு மண்ணெண்ணெயையும் உள்ளடக்கும் ; அத். 174

" சில்லறைப் பெற்றோல் நிலையம் " என்ற சொல் பெற்றோலைச் சில்லறையாக விற்கும் ஏதேனும் பெற்றோல் சாலை, பெற்றோல் நிலையம், அல்லது வேறேதேனும் வளவுகள் என்று பொருள்படும்.

35. முதலமைச்சராற் கட்டளையொன்றிற் குறிப்பிடப்படும் எந்தவோர் இலங்கையின் பிரதேசத் திலும் எந்த ஆளும் எஞ்சின், எரிபொருள்தாங்கி, வண்டி, சாமான் பெட்டி, அல்லது வாகனம், என்பதற்குள் அல்லது என்பதன் மேல் உள்ள ஆள் எவருக்கும் ஊறுவிளைக்கும் வகையில் ஏதேனும் புகைவண்டிப்பாதையில் அல்லது பொதுத் தெருவில் நிற்கும் எஞ்சின், எரிபொருள் தாங்கி வண்டி, சாமான் பெட்டி, அல்லது வாகனம் மேல் ஏதும் பொருளை அல்லது பதார்த்தத்தை எறிதல் கூடாது. கணைகளை எறிதல்.

36. (1) முதலமைச்சராற் கட்டளையொன்றிற் குறிப்பிடப்படும் எந்தவோர் இலங்கையின் பிரதேசத்திலும் வேறு எந்தவோர் ஆளின் மீதும் எந்தவோர் ஆளும் சட்டப்படியான சாக்கின்றித் தோட்டாவேற்றிய துவக்கையோ தோட்டாவேற்றப்படாத துவக்கையோ நீட்டுதல் கூடாது. துவக்கு நீட்டல்.

(2) இவ்வொழுங்குவிதியில் " துவக்கு " என்பது துவக்குவகைக் கட்டளைச்சட்டத்தில் " துவக்கு " என்ற சொல் குறிக்கும் பொருளையே உடைத்து.

37. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் எந்தவோர் இலங்கையின் பிரதேசத்தி லும், எந்தவோராளும் பின்வரும் செயல்களெல்லாவற்றையும் அல்லது அவற்றிலெதையாவது செய்தலாகாது. புகைவண்டி, அஞ்சல், தெருப் போக்குவரத்துச் சேவைகளோடு தலையிடுதல் முதலியன

(அ) அரசாங்கம் கொண்டு நடாத்தும் புகைவண்டியில், பயணம் செய்ய அதிகார மளிக்கும் போக்குச் சீட்டு இல்லாமல் அல்லது பணம் கொடுத்து வாங்கிய பயணச் சீட்டில்லாமல் பயணம் செய்தல் ; அல்லது

(ஆ) அந்தப் புகைவண்டிச் சேவை தொழிற்படுதலை எந்தவொரு விதத்திலேனும் தடைசெய்தல், அல்லது அதன் தொழிற்பாட்டிற்றலையிடுதல் ; அல்லது

(இ) அரசாங்கம் கொண்டு நடாத்தும் அஞ்சற்சேவையை எந்தவொரு விதத்திலேனும் தடைசெய்தல் அல்லது அச்சேவையில் தலையிடுதல் ; அல்லது

(ஈ) ஏலவே பணங்கொடுத்துப் பயணச் சீட்டுப்பெறுமல் ஏதேனும் பொதுப் போக்கு வரத்து வாகனத்தில் பிரயாணஞ் செய்தல் ; அல்லது

(உ) அத்தகைய ஏதேனும் வாகனம் தொழிற்படுதலை எந்தவொரு விதத்திலேனும் தடைசெய்தல் அல்லது அதில்தலையிடுதல்.

(2) ஒருவர் அவர் வகிக்கும் தொழிலின் தன்மையால் அல்லது வேறு வகையால் அவ்வாறு பயணம் செய்வதற்கு உரிமையுடையவராயிருப்பின் மாத்திரமே அரசாங்கம் கொண்டு நடத்தும் புகைவண்டியில், பயணம் செய்ய அதிகாரமளிக்கும் போக்குச் சீட்டு இல்லாமல் அல்லது பணம் கொடுத்து வாங்கிய பயணச் சீட்டில்லாமல் பயணம் செய்தார், அல்லது ஏலவே பணங்கொடுத்து பயணச் சீட்டுப்பெறுமல் ஏதேனும் பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பயணம் செய்தார் என்றவொரு காரணத்தால் மட்டும் அவர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் அல்லது (ஈ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளை மீறினுர் அல்லர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

38. ஏதேனுமோர் அவசரகால ஒழுங்குவிதியால் முதலமைச்சருக்கு அளிக்கப்படும் அல்லது அவர் மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது தொழில் முதலமைச்சரால் அதிகாரமளிக்கப்படும் எந்தவோர் அமைச்சராலும் நிறைவேற்றப்படலாம் அல்லது புரியப்படலாம். அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் தத்துவங்கள் கடமைகள் தொழில்கள் என்பனவற்றைக் கையளித்தல்

39. ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியால் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஓராளிற்கு அளிக்கப்பட்ட அல்லது ஓராளின் மேற்சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவர் நிறைவேற்றுவதை அல்லது முற்றுவிப்பதை எந்த ஆளும் எதிர்க்கவோ தடுக்கவோ கூடாது. அதிகாரம் பெற்ற ஆட்களை எதிர்த்தல் அல்லது தடுத்தல்

40. (1) ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை, அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்கு விதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சுமத்தப்பட்ட நிபந்தனையை மீறும் அல்லது அவற் றிற்கு இணங்கத்தவறும் எந்த வோராளும், குற்றமொன்றுபுரிந்தவராகி அத்தகைய ஒழுங்குவிதியிற் காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய, நீதிவான் ஒருவரால் சுருக்க விசாரணை செய்யப்பட்டு குற்றவாளியென்று காணப்பட்டதன்மேல், மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந்தாண்டிற்கு மிகாததுமான ஒரு காலத்திற்குக் கடூழியச் சிறைத்தண்டனையும் ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மிகாததுமான குற்றப்பணமும் விதிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும். தண்டம்

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்திற்கு அவ் ஒழுங்குவிதியில் தண்டனையெதுவும் குறிக்கப்படாதிருக்குமிடத்து, அத்தகைய குற்றத்தைப் புரியும் ஓர் ஆள், நீதிவானொருவரால் சுருக்க விசாரணை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று காணப்பட்டபின், இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்படும் அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) கிரிமினல் நடைமுறைச் சட்டக் கோவையின் 15 ஆ என்னும் பிரிவும், குற்றப்பணக் கொடுப்பனவு (சுருக்க விசாரணையாதிக்கமுள்ள நீதிமன்றம்) கட்டளைச் சட்டத்தின் 6 ம் பிரிவும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழான குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவோராளுக்கும் ஏற்புடையனவாகா.

குற்றமிழைக்க எத்தனித்தலும் குற்றமிழைப் போருக்குதவுதலும்.

41. (1) ஏதேனும் அவசர கால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் குற்றத்தைப் புரிய எத்தனிக்கும் அல்லது புரிதற்குத் தொடக்கமாக அமையும் ஏதேனும் செயலைச் செய்யும் எந்தவோராளும், அந்த வொழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்தைச் செய்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) யாரேனுமொருவர் ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்றிற்காகக் குற்றவாளியாகின்றாரென்பதை அறியும் அல்லது நம்புதற்குரியாயமான காரணமுடையவராயிருக்கும் எந்தவோராளும், அந்த யாரேனுமோராளுக்கு, அந்தச் சொல்லப்பட்ட குற்றத்திற்காக அந்த ஆளைக் கைதுசெய்வதை அல்லது தண்டிப்பதைத் தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும் அல்லது குழப்பும் எண்ணத்தோடு, உதவியளிக்கக் கூடாது.

ஆட்குழுவினரால் செய்யப்படும் குற்றங்கள்.

42. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்று ஓர் ஆட்குழுவினராற் செய்யப்பட்டவிடத்து—

(அ) அந்தக் குழுவினர் இணைக்கப்பட்ட குழுவினராயின், அவ்விணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணியாளரும்,

(ஆ) அந்தக்குழு ஒரு வணிகக்கூட்டுநிலையமாயின் அவ்வணிகக்கூட்டு நிலையத்தின் ஒவ்வொரு பங்காளனும்,

தமக்குத் தெரியாமல் அக்குற்றம் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய குற்றம் புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தம்மாலானவரை கவனமெடுத்தாரென்று அவர் நிரூபித்தாலன்றி அக்குற்றம் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

பிணை

அத். 19

43. (1) எந்தச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் அதைப் பொருட்படுத்தாது, இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய எந்த வொரு நீதிமன்றமும் தண்டச் சட்டக் கோவையின் 6 ஆம், 7 ஆம் அல்லது 8 ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் குற்றத்தை முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் ஏதேனும் பிரதேசத்தில் புரிந்ததாக அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றத்தைப் புரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்படும் எந்த ஆளையும் சட்டத்துறைத் தலைவர் அந்த ஆளைப் பிணையிற் போகவிடலாமென்று எழுத்து மூலத்தில் விருப்பம் தெரிவித்தாலொழிய அல்லது உதவிப் பொலிசுகண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாத பொலிசு உத்தியோகத்தரொருவர் அந்த ஆளைப் பிணையிற் போகவிடுவதில் தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையென்று வாயால் அல்லது எழுத்து மூலத்தில் நீதிமன்றத்திற்கு அறிவித்தாலொழிய, விடுதலை செய்தலாகாது.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்றைப் புரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்படுமொருவர் பதினைந்து நாட்களுக்கு அல்லது அதிலும் மேலாக விளக்கமறியலிருந்திருக்குமிடத்து, வழக்குத் தொடரும் உத்தியோகத்தர் சம்மதித்தால், நீதிமன்றம் அவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டவரை, பிணையில் அல்லது நீதிமன்றத்தில் அவர் தோன்றுவதற்கென பிணையாள் ஒருவர் இல்லாமலே பிணைப்பத்திரமொன்றை எழுதிக்கொடுப்பதன் பேரில் விடுதலை செய்யலாம் ; அத்துடன் பிணைப்பத்திரத்தின் அல்லது பிணையாளில்லாத பிணைப்பத்திரத்திற்கான தொகை—

(அ) அந்தக் குற்றம் 19 ஆம் ஒழுங்குவிதியின் கீழான குற்றமாயின் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு நியாயமான தொகையாகவும்.

(ஆ) அந்தக் குற்றம் வேறேதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமாயின் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு நியாயமான தொகையாகவும் இருத்தல் வேண்டும்.

கிரிமினல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திரிபுசெய்யப்படுதல்.

44. (1) முதலமைச்சரால் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் ஏதேனும் பிரதேசத்தில் இவ்வொழுங்குவிதி நடைமுறையிலிருக்கும் காலத்தில்—

(அ) சட்டவிரோதமாக ஆட்கள் கூடிநிற்பதைக் கலைத்தற்கான தத்துவங்கள் சம்பந்தமான கிரிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 99 ஆம் 100 ஆம் 101 ஆம் 102 ஆம் 103 ஆம் பிரிவுகள் நடைமுறையிலிராதொழியும் ; அத்தோடு

(ஆ) "சாசன்" தரத்திற்குக் குறையாத யாரேனும் பொலிசு உத்தியோகத்தர், கோப்போரல் தரத்திற்குக் குறையாத யாரேனு இலங்கைத் தரைப்படை உறுப்பினர், தலைமைக் கடலோடி தரத்திற்குக் குறையாத யாரேனும் அரசகடற்படையுறுப்பினர் அல்லது கோப்போரல் தரத்திற்கு குறையாத யாரேனும் அரச ஆகாயப்படையுறுப்பினர், ஏதேனும் பொதுத் தெரு, புகைவண்டிப்பாதை, பொதுப் பூங்கா, பொதுப் பொழுதுபோக்கிடம், அல்லது வேறு விளையாட்டிடம், கடற்கரை என்பவற்றில்

அல்லது அவற்றுக்கண்மையில் அல்லது ஏதேனும் பொதுக்கட்டடம் அல்லது அரசாங்கத் திணைக்களம் அமைந்துள்ள வளவில் அல்லது வளவுக்கண்மையில் அல்லது வளவின் அயலில் நிற்கும் எந்த ஆளையும் அல்லது ஆட்களையும் அந்த இடத்திலிருந்து அகலும்படி கட்டளையிடலாம் ; அத்தகைய கட்டளைக்கு இணங்குதல் அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரினதும் கடமை யாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழான கட்டளை யொன்று, அத்தகைய கட்டளையைப் பிறப்பிப்பதற்கான தத்துவமுடைய உத்தியோகத்தரொருவரால் விடுக்கப்பட்ட பின்னர், எவரேனும் அக்கட்டளைக்கு இணங்க மறுத்தால் அல்லது இணங்க மறுப்ப தாக தீர்மானங்கொண்டவர்போல நடந்துகொண்டால் அத்தகைய உத்தியோகத்தர் தேவையான அத்தகைய உதவியோடு ஆயுதம் தாங்கிய படையுட்பட வலோற்காரத்தை உபயோகித்ததன் மூலம் அத்தகைய கட்டளையை நிறைவேற்ற முற்படலாம் ; அத்துடன் அவர் அத்தகைய ஆளை அவ்விடத்தி னின்றும் அகற்ற, கைதுசெய்ய, அல்லது தனிப்படுத்திவைக்க வழிவகைகள் செய்யலாம்.

(3) இவ்வொழுங்குவிதி நடைமுறையிற்றொடர்ந்திருக்குங் காலத்துக் கிரிமினல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 325 ஆம் பிரிவு, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்படும் அல்லது குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படும் யாரே னும் ஆளுக்கு அல்லது அவர் தொடர்பாக ஏற்புடையதாதலாகாது.

**அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான குற்றங் கள் தொடர்பான நடவடிக்கை களுக்கு முதலிடம் கொடுத்தல்.**

45. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஒருவரால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றம் தொடர்பான நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்திலும் மற்ற அலுவல்களைக் கவனிக்க முன்னர், எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**அரசாங்க அதிபர் ஒருவரினது தத்து வங்கள், கடமை கள் என்பன இணைப்புத்தி யோகத்தர் ஒருவ ரால் பிரயோகிக் கப்படலாம் அல் லது புரியப்பட லாம்.**

46. முதலமைச்சர், கட்டளையொன்றின் மூலம் எந்த ஆளையும் பெயர் குறித்து, அல்லது பதவி குறித்து அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் எப்பிரதேசத்துக்கும் இணைப்புத்தி யோகத்தராக நியமிக்கலாம்.

(2) முதலமைச்சரின் கட்டளையால் இலங்கையின் ஏதேனுமொரு பிரதேசத்திற்கு இணைப்புத்தி யோகத்தரொருவர் நியமிக்கப்பட்ட விடத்து, அத்தகைய உத்தியோகத்தர் அத்தகைய பிரதேசத்தில் ஏதேனும் எழுத்திலுள்ள சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் முறையில் அரசாங்க அதிபர் ஒருவருக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மேல் திணிக்கப்படும் எல்லாத் தத்துவங்கள், கடமைகள் அல்லது தொழில்களையும் நிறைவேற்றுதல் வேண்டும் புரிதல் வேண்டும், அல்லது ஒப்பேற்றுதல் வேண்டும் ; அத்தோடு அந்த நோக்கங்களுக்கென அத்தகைய எழுத்துமூலச் சட்டத்தில் அரசாங்க அதிபருக்கான ஒவ்வொரு குறிப்பீடும் அந்தப் பிரதேசத்திற்கு அச்சட்டங்கள் பிரயோகிக்கப்படுவதைப் பொறுத்தவரையில், அத்தகைய இணைப்புத்தியோகத்தர்க்கான குறிப்பீடுகளாகப் பொருள் கொள் ளப்படுதல் வேண்டும்.

**சட்ட நடவடிக்கை கள் நீதிமன்ற அமர்வுகள் முத லியன**

47. (1) இதன் கண் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, வேறெந்த எழுத்துமூலச்சட்டத்தில் என்ன இருப்பினும் ஏதேனும் அவசர கால ஒழுங்குவிதியின் கீழ் ஓர் ஆளால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு குற்றம் தொடர்பான நடவடிக்கை அந்த ஆள் அப் போதைக்கு இருக்கும் இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டிருக்கும் இலங்கையின் தோதான நீதிமன்றத்தின் முன் எடுக்கப்படலாம்.

(2) (அ) அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆட்களால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள், அல்லது

(ஆ) குற்றங்களாக அமையும் செயல்கள் அல்லது செய்யாமைகள் அத்தகைய ஒழுங்கு விதிகளின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை நேரடியாக அல்லது மறைமுகமாக நிறைவேற்றுதல் அல்லது புரிதல் அல்லது கருதப்படும் நிறைவேற்றுதல் அல்லது கருதப்படும் புரிதல் என்பவற்றின் விளைவாக அல்லது அவற்றிலிருந்து எழுந்ததாக அல்லது அச்செயல்களின்போது செய்யப்பட்டனவாக அல்லது செய்யாதுவிடப்பட்டனவாக இருக்கும் வேறேதேனும் எழுத்துமூலச் சட்டத் தின் கீழ் ஆட்களால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள்,

எந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுதல் அல்லது விளங்கப்படுதல்வேண்டுமென்பதை சட்டத்துறைத் தலைமையதிபதி முடிவு செய்யலாம். அத்தகைய குற்றங்கள் அத்தகைய நீதிமன்றத்தின் நியாயா திக்க எல்லைக்குள் இழைக்கப்பட்டனவாயிருப்பின், அத்தகைய குற்றங்களை விசாரிக்க அல்லது விளங்க நியாயாதிக்கமுடைய நீதிமன்றமாக அது இருத்தல் வேண்டும்.

(3) இந்த ஒழுங்குவிதியின் (2) ம் பந்தியின் கீழ்ச் சட்டத்துறைத் தலைமையதிபதி ஏதேனும் குற்றம் எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்படவேண்டுமென்று முடிவு செய்யு மிடத்து, அவர் தமது ஆணையின் கீழ் எழுத்து மூலத்தில், அத்தகைய நீதிமன்றத்தை, அத்தகைய குற்றங்கள் விசாரிக்கும் அல்லது விளங்கும் நீதிமன்றமாக நியமித்தல் வேண்டும் ; அதற்கியைய அத்தகைய விசாரணை அல்லது விளக்கம் அத்தகைய ஆணையின் அதிகாரத்தின் பேரில் அத்தகைய நீதிமன்றத்தால் நடாத்தப்படுதல் வேண்டும் ; அத்தகைய ஆணை அத்தகைய விசாரணையின் அல்லது விளக்கத்தின் நடவடிக்கைகளுடன் பதிவுப்புத்தகத்தில் கோத்துவைக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழான, சட்டத்துறைத் தலைமையதிபதியின் முடிவு—

(அ) இலங்கை முழுவதிலும் அல்லது இலங்கையின் ஏதேனுமொரு குறித்த பிரதேசத்தில் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆட்களால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் எல்லாக் குற்றங்களுக்கும் ; அல்லது

(ஆ) இலங்கை முழுவதிலும் அல்லது இலங்கையினேதேனுமொரு குறித்த பிரதேசத்தில் ஏதேனுமொரு குறித்த வகுப்பினரால் அல்லது விபரமுடையவரால் அவ்வாறு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் எல்லாக் குற்றங்களுக்கும் ; அல்லது

(இ) இலங்கை முழுவதிலும் அல்லது இலங்கையினேதேனுமொரு குறித்த பிரதேசத்தில் அவ்வாறு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும், ஏதேனுமொரு குறித்த வகுப்பை அல்லது விபரத்தைச் சார்ந்த எல்லாக் குற்றங்களுக்கும் ; அல்லது

(ஈ) இலங்கை முழுவதிலும் அல்லது இலங்கையினேதேனுமொரு குறித்த பிரதேசத்தில் குறித்தவொரு வகுப்பினர் அல்லது விபரத்தினரைச் சேர்ந்த ஆட்களால் அல்லது எவரேனும் குறிக்கப்பட்ட ஆளால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஏதேனுமொரு குறித்த வகுப்பை அல்லது விபரத்தைச் சார்ந்த எல்லாக் குற்றங்களுக்கும் ; அல்லது

(உ) இலங்கை முழுவதிலும் அல்லது இலங்கையின் ஏதேனுமொரு குறித்த பிரதேசத்தில், குறிப்பிடப்பட்ட ஆள் எவராலும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குறித்த ஏதேனும் குற்றத்திற்கும் ஏற்புடையதாகும் வண்ணம் செய்யப்படலாம்.

(5) இவ்வொழுங்குவிதி நடைமுறையிற் றொடர்ந்திருக்கும் காலத்தில், ஏதேனும் கிரிமினல் குற்றத்தின் விசாரணையை அல்லது விளக்கத்தை ஏதேனுமொரு நீதிமன்றத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து வேறேதேனுமொரு நீதிமன்றத்திற்கு அல்லது இடத்திற்கு மாற்றச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குத் தத்துவம் அளிக்கும் நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான காப்புவாசகம் நடை முறையில் இல்லாதிருந்தாற் போலப் பயனுடையதாதல் வேண்டும்.

(6) முதலமைச்சர் தாம் அவ்வாறு செய்தல் உகந்ததென்று கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பின்வருங்கருமங்களெல்லாவற்றிற்கும் அல்லது அவற்றுள்ளேதேனுமொன்றிற்கு ஏற்பாடு செய்யலாம் :—

(அ) உயர் நீதிமன்றத்தின் கிரிமினல் அமர்வுகள், எந்த ஒரு மாகாணத்திலும் நிகழ்வதை நிறுத்திவைத்தல் அல்லது முடிவடையச் செய்தல் ;

(ஆ) எந்த வொரு மாகாணத்திலும் நிகழும் உயர்நீதிமன்றத்தின் அத்தகைய ஏதேனும் நிறுத்தி வைக்கப்பட்ட கிரிமினல் அமர்வில் விளக்கத்திற்குத் தயாராயிருந்த எல்லா வழக்குகளையும் அல்லது ஏதேனுமொரு வழக்கை, வேறேதேனுமொரு மாகாணத்திலுள்ள உயர்நீதிமன்றத்தின் ஏதேனுமொரு கிரிமினல் அமர்வுக்கு மாற்றுதல் ;

(இ) ஏதேனுமொரு மாகாணத்தில் நிகழும் மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள், கிராம நீதி மன்றங்கள் என்பவற்றுள் ஏதேனுமொன்றினது அல்லது எல்லாவற்றினதும் அமர்வுகளை நிறுத்திவைத்தலும் அவ்விதம் நிறுத்தி வைக்கப்பட்ட அத்தகைய நீதிமன்றங்களின் அத்தகைய அமர்வுகளில் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்படத் தாயாராயிருந்த எல்லா வழக்குகளையும் அல்லது ஏதேனுமொரு வழக்கை வேறேதேனுமொரு மாகாணத்திலுள்ள மாவட்ட நீதிமன்றங்களுக்கும் நீதிவான் நீதிமன்றங்களுக்கும் கிராம நீதிமன்றங்களுக்கும் மாற்றுதலும்.

(ஈ) கட்டளைக்கு முழுவலுவும் பயனும் அளிக்கும் நோக்கங்களுக்கென, அவை சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்படுதல் அவசியமாயுள்ள வேறு கருமங்கள்.

(7) இவ்வொழுங்கு விதியின் (6) ஆம் பந்தியின் கீழ் முதலமைச்சரால் ஆக்கப்படும் ஒரு கட்டளை, வேறேதேனும் எழுத்துமூலச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், சட்டத்தைப் போன்ற வலுவுடையதாயிருத்தல் வேண்டும்.

7 ஆம் ஒழுங்கு விதியின் கீழ்க் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பான சிறப்பேற்பாடுகள்.

48. (1) கிரிமினல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 36 ஆம், 37 ஆம், 38 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்க் கைதுசெய்யப்பட்ட ஆட்கள் தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, பொலிசுப் பரிசோதகர் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட இடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எந்த ஆளும், அந்த ஆள் அந்த ஒழுங்குவிதியின் கீழ்க் கைதுசெய்யப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்படும் பதினைந்து நாட்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு அவ்வாறு தடுத்து வைக்கப்படலாம் ; மேலும் அத்தகைய ஆள் அத்தகைய காலம் முடிவடைதற்கு முன்னர் அத்தகைய உத்தியோகத்தரால் தகுதி வாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டாலொழிய, அத்தகைய கால முடிவில் அத்தகைய ஆளை அத்தகைய உத்தியோகத்தர் விடுதலை செய்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்கு விதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றிக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட ஆளொருவர் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்ற மொன்றின் முன் இவ்வொழுங்கு விதியின் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் உத்தி யோகத்தராற் கொண்டுவரப்பட்டவிடத்து, அந்த ஆள் கிரிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை யின் 36 ஆம், 37 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டிருந் தாற்போன்று அதே விதமாக அத்தகைய நீதிமன்றத்தினால் எல்லா அலுவல்கள் தொடர்பாகவும் கையாளப்படுதல் வேண்டும்.

சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதி.

49. (1) சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்துமூல அநுமதியிருந்தாலல்லாமல்—

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்கு விதிக்கு எதிரான எந்தவொரு குற்றத்திற்காகவும் ; அல்லது

(ஆ) அக்குற்றமாக அமையும் செயல் அல்லது செய்யாமை அத்தகைய ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை நேரடியாக அல்லது மறைமுகமாக நிறைவேற்றுதல் அல்லது புரிதல் அல்லது கருதப்படும் நிறை வேற்றுதல் அல்லது கருதப்படும் புரிதல் என்பவற்றின் விளைவாக அல்லது அவற்றிலிருந்து எழுந்ததாக அல்லது அச்செயலின்போது செய்யப்பட்டதாக அல்லது செய்யாது விடப்பட்டதாகவுள்ள, வேறேதேனும் எழுத்து மூலச் சட்டத்திற் கெதிரான, ஒரு குற்றத்திற்காக, வழக்குத் தொடரப்படுதலாகாது.

(2) அக்கட்டளையிற் காட்டப்பட்டிருக்கக் கூடிய அவசரகால ஒழுங்குவிதியெதற்குமெதிரான ஒரு குற்றம் சம்பந்தமாக, இவ்வொழுங்கு விதியின் (1) ம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா வெனமுதலமைச்சர் கட்டளை மூலம் வெளிப்படுத்தலாம் ; அதற்கிணங்க, அக்கட்டளை நடைமுறையி லிருக்கும் காலம் வரையில் அப்பந்தி அத்தகைய குற்றமெதற்கும் ஏற்புடையதாகாது.

கிரிமினல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை.

50 (1) கிரிமினல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் கீழான எல்லா விசாரணை களுக்கும் அல்லது குறிப்பான ஏதேனும் வகையான விசாரணைகள் அல்லது குறித்த ஏதேனுமொரு விசாரணை எந்த நீதிமன்றத்தில் நிகழ்த்தப்பட வேண்டுமென்பதைச் சட்டத்துறைத் தலைமையதிபதி முடிவுசெய்யலாம். அத்தகைய நீதிமன்றம், அத்தகைய விசாரணைகளின் அல்லது விசாரணையின் விடயப்பொருள்களாக அல்லது விடயப்பொருளாக அமையும் நிகழ்ச்சிகள் அல்லது செயல்கள் அல்லது சங்கதிகள் அல்லது நிகழ்ச்சி அல்லது செயல் அல்லது சங்கதி, அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தின் இட எல்லைக்குள் நிகழ்ந்திருப்பின் அல்லது செய்யப்பட்டிருப்பின் அத்தகைய விசாரணைகளை அல்லது விசாரணையை நடாத்த நியாயாதிக்கமிருந்திருக்கக்கூடிய நீதிமன்றமொன்றாக அத்தகைய நீதிமன்றம் இருத்தல் வேண்டும்.

(2) கிறிமினல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் கீழான ஏதேனும் விசாரணைகள் அல்லது விசாரணை எந்த நீதிமன்றத்தில் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதை இவ்வொழுங்கு விதியின் (1) ம் பந்தியின் கீழ்ச் சட்டத்துறைத்தலைமையதிபதி முடிவுசெய்யுமிடத்து அத்தகைய விசாரணைகள் அல்லது விசாரணை எதனால் நடாத்தப்படவேண்டுமோ அந்த நீதிமன்றமாக அவர் எழுத்திலுள்ள தமது ஆணையின் மூலம் அத்தகைய நீதிமன்றத்தை நியமித்தல் வேண்டும் ; அதற்கிணங்க அத்தகைய விசாரணைகள் அல்லது விசாரணை அத்தகைய ஆணையின் அதிகாரத்தில் பேரில் அத்தகைய நீதிமன்றத்தினால் நடாத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விசாரணை களை அல்லது விசாரணையை நடாத்துவதற்கு வேறெந்த நீதிமன்றத்துக்கும் நியாயாதிக்கமிருத்த லாகாது

(3) இவ்வொழுங்குவிதியில் " விசாரணை " என்ற கூற்று கிரிமினல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தின் முன் அல்லது விசாரணையாள் ஒருவர் முன் நடத்தப்படும் ஒவ்வொரு விசாரணையையும் அல்லது உசாவலையும் உள்ளடக்கும் இதற்கேற்ப "விசாரணைகள் " என்ற கூற்றும் பொருள்கோடப்படுதல் வேண்டும்.

(4) வேறேதேனும் எழுத்து மூலச் சட்டத்தில் இதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் இவ்வொழுங்கு விதியின் ஏற்பாடுகள் பயனுடையவாதல் வேண்டும்.

கட்டுக்காப்பிலிடலும் பிணையும்.

51. (1) பொலிசின், இலங்கைத் தரைப்படையின் இலங்கை அரச கடற்படையின் அல்லது இலங்கை அரச ஆகாயப்படையின் உறுப்பினரெவரேனுமொருவரின் விஷயத்தில்—

(அ) அத்தகைய உறுப்பினரை விளக்கமறியலுக்கனுப்புதற்கு அல்லது விளக்கமறியலில் வைத்திருப்பதற்கு அல்லது பிணைகட்டும்படி அத்தகைய உறுப்பினரைப் பணிக்கும் கட்டளையொன்றையிடுவதற்கு நீதிமன்றமொன்று மற்றெல்லாவகையிலும் உரிமை யுடையதாயிருக்குமிடத்து, அல்லது

(ஆ) அத்தகைய உறுப்பினர், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் நீதிமன்றமொன்றினால் இடப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றிப் பிசுக் காலின் கட்டுக்காப்பில் அத்தகைய உறுப்பினர் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், அப்பிசுக்கால்,

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தோதான சான்றிதழ் காட்டப்பட்டதன் மேல் அந்த உறுப்பினரை அவ்வுத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) பொலிசின், இலங்கைத் தரைப்படையின், இலங்கை அரச கடைப்படையின், அல்லது இலங்கை அரச ஆகாயப்படையின் உறுப்பினர் ஒருவர் இவ்வொழுங்குவிதியை மீறி விளக்க மறியலுக்கனுப்பப்படுமிடத்து அல்லது விளக்கமறியலில் வைத்திருக்கப்படுமிடத்து அல்லது கட்டுக் காப்பில் வைத்திருக்கப்படுமிடத்து அத்தகைய உறுப்பினர் சட்டத்துக்கு மாறாகத் தடுத்து வைக்கப் பட்டிருக்கிறாரென எல்லா நோக்கங்களுக்குங் கருதப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் கீழ் ஒரு நீதிமன்றத்தினுல் எந்த ஆளாவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரிடம், ஒப்படைக்கப்படுமிடத்து அந்த நீதிமன்றத்தில் அவ்விதம் செய்யுமாறு வேண்டப்படும்போதெல்லாம், அத்தகைய ஆளை அத்தகைய நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து நிறுத்துதல் அத்தகைய உத்தியோகத்தரின் கடமையாகும்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சான்றிதழ் அதிற் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியைப்பற்றியும் அத்தகைய உத்தியோகத்தர் அச்சான்றிதழைக் கொடுக்க அதிகாரம் உடையவரென்பதைப் பற்றியும் முடிவான சான்றாகும்.

(5) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென—

"தகுதிவாய்ந்த சான்றிதழ்" என்ற கூற்று ஆளொருவர் தொடர்பாக, அத்தகைய ஆள் ஒரு பொலிசுறுப்பினர் அல்லது இலங்கைத் தரைப்படை உறுப்பினர், அல்லது இலங்கை அரச கடற்படை உறுப்பினர் அல்லது இலங்கை அரச ஆகாயப்படையுறுப்பினர் எனத் தாற்பரியப்பட அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் என்று பொருள்படும்; அத்தோடு "அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்ற கூற்று

(அ) பொலிசுறுப்பினர் எவரேனுமொருவர் தொடர்பாக, பொலிசுப் பரிசோதகர் தலைவர் அல்லது அவரால் இவ்வொழுங்குவிதியின் கீழ்ச் செயலாற்றுவதற்கு எழுத்துமூலத்தில் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனுமொரு பொலிசு உத்தியோகத்தர் என்று பொருள்படும்.

(ஆ) இலங்கைத் தரைப்படையுறுப்பினர் எவரேனுமொருவர் தொடர்பாக, தரைப் படை ஏவுநர் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழ்ச் செயலாற்றுவதற்கு எழுத்து மூலத்தில் ஏவுநரால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனுமொரு தரைப்படை உத்தியோகத்தர் என்று பொருள்படும்.

(இ) இலங்கை அரச கடற்படையுறுப்பினர் எவரேனுமொருவர் தொடர்பாக, கடற் படைமுதல்வன் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழ்ச் செயலாற்றுவதற்குக் கடற்படை முதல்வனுல் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனுமொரு கடற்படை யுத்தியோகத்தர் என்று பொருள்படும் ;

(ஈ) இலங்கை அரச ஆகாயப்படையுறுப்பினர் எவரேனுமொருவர் தொடர்பாக. ஆகாயப்படை ஏவுநர் அல்லது இந்த ஒழுங்கு விதியின் கீழ்ச் செயலாற்றுவதற்கு ஆகாயப்படை ஏவுநரால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனுமொரு ஆகாயப்படை உத்தியோகத்தர் என்று பொருள்படும்.

(6) வேறேதேனும் எழுத்துமூலச் சட்டத்தில் இதற்கு முரணுக ஏது எவ்வாறு இருப்பினும் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

*மேன்முறையீடு களின் மீது உயர் நீதிமன்றம்தீர்க் கும் தீர்மானங்களி லிருந்து எழும் குறித்த சில அலு வல்கள் தொடர் பாகச் சட்டத் துறைத் தலைமை யதிபதிக்குள்ள தத்துவம்.*

52. (1) குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் முப்பதாம் அத்தியாயத்தின் கீழ் வழக்கொன்று மேன் முறையீட்டின் பேரில் உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது தீர்மானிக்கப் படுகின்றவிடத்து சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் அத்தகைய மேன் முறையீட்டின் மீது உயர்நீதிமன்றத்தாற் செய்யப்பட்ட கட்டளைக்கு இணங்கியதாயும் பொருந்திய தாயும் இருப்பதற்கென அக்கோவையின் 350 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப் படுமாறு வேண்டப்படும் அத்தகைய எல்லாக் கட்டளைகளும் அல்லது அவற்றிலேதாவது அல்லது அவ்வழக்கின் பதிவுப் புத்தகங்களுக்கான அத்தகைய எல்லாத் திருத்தங்களும் அல்லது அவற்றிலெதாவது உயர் நீதிமன்றத்தால் அந்த மேன்முறையீட்டின் மீதான கட்டளை எந்த நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்தப்பட்டதோ அந்த நீதிமன்றத்திலல்ல, ஆனுல் அம்மேன் முறையீடு வேறேதேனுமொரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையொன்றிற்கெதிரானதாயின் அம்மேன்முறையீட்டின் மீதான அதன் கட்டளையை எந்த நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்துமாறு அச்சட்டக்கோவையின்படி உயர்நீதிமன்றம் வேண்டப்பட்டிருக்கக்கூடுமோ அத்தகைய வேறு நீதிமன்றத்திலேயே செய்யப்படுதல் வேண்டும் எனத் தீர்மானிக்கலாம்.

(2) மேன்முறையீட்டின்பேரில் உயர் நீதிமன்றத்தினுல் முடிவு செய்யப்படும் ஏதேனுமொரு வழக்கில், இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கட்டளைகளும் திருத்தங்களும் எந்த நீதிமன்றத்தினுல் செய்யப்படுதல் வேண்டும் என்பதை அப்பந்தியின் கீழ்ச் சட்டத்துறைத் தலைமையதிபதி தீர்மானிக்கும் இடத்து, அவர் தமது ஆணையால் எழுத்து மூலத்தில் அந்த நீதி மன்றந்தான் அத்தகைய கட்டளைகளும் திருத்தங்களும் எந்த நீதிமன்றத்தினுற் செய்யப் படவேண்டுமோ அந்த நீதிமன்றமாக, அவர் எழுத்திலுள்ள தமது ஆணையின் மூலம் அந்த நீதிமன்றத்தையே நியமித்தல் வேண்டும் ; அதன் பேரில்—

(அ) அந்த மேன்முறையீட்டின் மீதான உயர்நீதிமன்ற கட்டளை எந்த நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்தப்பட்டதோ அந்த நீதிமன்றம் அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப் பட்ட படியான கட்டளையை, அவ்வழக்கின் பதிவேடு, மேன்முறையீட்டு மனு (அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்டபடியான கட்டளைக்கு உயர்நீதிமன்றத்தினுற் கொடுபட்ட காரணங்கள் ஏதேனுமிருப்பின்) அவற்றின் பிரதியொன்று என்பவற் ருேடு சேர்த்து அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிமன்றத்திற்கு அவ்வாறு அத்தாட்சிப் படுத்தப்பட்டபடி அனுப்பிவைத்தல் வேண்டும் ; அத்தோடு

(ஆ) அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட நீதிமன்றம், அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட படியான கட்டளையும் அத்தகைய பதிவேடும் அத்தகைய பிரதியேதேனும் இருப் பின் அதுவும் அவ்விதம் நியமிக்கப்பட்ட நீதிமன்றத்திஞலேற்றுக்கொள்ளப்பட்ட பின் அத்தகைய கட்டளைகளும் திருத்தங்களும் அந்த ஆணையின் அதிகாரத்தின் மீது அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிமன்றத்திஞலேயேயன்றி அம்மேன்முறை யீட்டின் மீதான உயர்நீதிமன்றக் கட்டளை எந்த நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்திஞல் செய்யப்படுதலாகாது,

அந்த ஆணை, அந்த வழக்கின் நடவடிக்கைகளோடு சேர்த்துப் பதிவேட்டில் கோத்து வைக்கப்படுதல் வேண்டும். அந்த ஆணையின் அதிகாரத்தின்படி அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிமன்றத்தால் செய்யப் பட்ட கட்டளைகள், திருத்தங்கள் ஆகியனவெல்லாம் அத்தகைய கட்டளைகளின் விளைவாகச் செய்யப் பட்ட எல்லாச் செயல்களும் அல்லது அலுவல்களும் ஆகிய எவையாயினுஞ் சரி எல்லா நோக்கங் களுக்கும் செல்லுபடியும் வலுவுடையனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் அதற்கு முரணுன எது எவ்விதமிருப்பினும் இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகள் பயனுடையவாதல் வேண்டும். அத்தியாயம் 20

53. இலங்கைத் தரைப்படையின் ஒழுங்கானபடை, இலங்கை அரச கடற்படை அல்லது இலங்கை அரச ஆகாயப்படை என்பவற்றின் ஒவ்வோருறுப்பினரும்— படையுறுப்பினர் சுங்க அலுவலர்களாக வேலைக் கமர்த்துதல்

(அ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் **118** ஆம், **125** ஆம், **126** ஆம், **127** ஆம், **135** ஆம், **143** ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்கென சுங்கச் சேவைகளில் வேலைக்கமர்த்தப் படுதல் வேண்டும் ; மேலும் அந்த நோக்கங்களுக்கென, மேற்சொன்ன பிரிவுகளால் சுங்க உத்தியோகத்தர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களை அவர்கள் பிரயோகிக்கவும் வேண்டும், அத்துடன் அத்தியாயம் 235

(ஆ) குடியேற்றக் குடியகல்வுச் சட்டத்தின் கருத்துப்படியும் அதன் நோக்கங்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரெனக் கருதப்படுதல் வேண்டும். இதற் கியைய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அச்சட்டத்திஞல் அல்லது அதன் கீழ் உரித்தாக்கப்பட்டதத்துவங்களை, கடமைகளை, அல்லது பணிகளை அவர் பிரயோகிக்கவும், புரியவும் அல்லது நிறைவேற்றவும் வேண்டும். அத்தியாயம் 351

54. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் ஏதேனும் இலங்கைப் பிரதேசத்தில் தீவைத்தல் சூறையாடுதல் அத்துமீறுதல்.

(அ) நெருப்பு அல்லது ஏதேனும் எரியத்தக்கபொருள் அல்லது ஏதேனும் வெடி பொருள் அல்லது அரிபதார்த்தம் அல்லது ஏதேனும் கணை, போர்க்கருவி அல்லது ஏதேனும் வகையைச் சேர்ந்த கருவியின் உதவியோடு அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது உள்ளூரதிகாரசபைக்குச் சேர்ந்த அல்லது தனியாளுக்குச் சேர்ந்த அல்லது ஏதேனும் ஆட்சிக் குழுவுக்குச் சேர்ந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்திற்கு அழிவை அல்லது கெடுதியைவிளைக்கும் ஏதேனும் செயலை அல்லது அத்தகைய ஆதனத்தின் பெறுமானத்தை அல்லது பயன் பாட்டை அழிக்கக் கூடிய அல்லது குறைக்கக்கூடிய ஏதேனும் மாறுதல்களை அதில் ஆக்கும் ஏதேனும் செயலைச் செய்யும் ; அல்லது

(அஅ) நெருப்பு அல்லது ஏதேனும் எரியத்தக்கபொருள் அல்லது ஏதேனும் வெடி பொருள் அல்லது அரிபதார்த்தம் அல்லது ஏதேனும் கணை, போர்க்கருவி அல்லது ஏதேனும் வகையைச் சார்ந்த கருவியின் உதவியோடு வேறுயாரேனு மாளுக்குச் சாவை அல்லது காயத்தைவிளைவிக்கும் அல்லது விளைக்க முயலும் ; அல்லது

(ஆ) குடியிருப்பில்லாமல் அல்லது பாதுகாப்பில்லாமல் விடப்பட்ட ஏதேனும் வளவிற்குள் உள்ள ஏதேனும் பொருளைக் களவாடும் ; அல்லது

(இ) அத்தியாவசிய சேவைகளைப் புரிதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப் பட்ட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் வாகனத்தின், பொறித் தொகுதியின், உபகரணத்தின் அல்லது வேறு பொருளின் திறமையை ஏதேனுமொரு செயல் குறைக்குமென்னும் அல்லது தடைசெய்யுமென்னும் அல்லது மேற்சொன்னவாறு பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் வேலையின் அமைப்பின் அல்லது வளவின் பயனை அச்செயல் பழுதுபடுத்து மென்னும் நோக்கத்தோடு அல்லது அச்செயல் மேற்சொன்னவாறு செய்யும் என்று தெரிந்தும் அல்லது அவ்வாறு செய்யக்கூடும் என்று நம்பக்கூடிய காரணம் இருந்தும் அச்செயலைச் செய்யும் அல்லது

(ஈ) தண்டவியற் சட்டக்கோவையில் **427** ஆம் பிரிவு தொடங்கி **446** ஆம் பிரிவு வரையிலுள்ள பிரிவுகளின் ஏதேனுமொன்றின் கீழான குற்றமெதனையாவது செய்யும் அல்லது ஏதேனும் வளவிலிருந்து ஏதேனும் சாமானை அல்லது பொருளைச் சட்டவிரோதமாக அகற்றிச் செல்லும் அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கும், அல்லது அத்தியாயம் 19

(உ) முற்போந்த உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைச் செய்தல் அவ்வாட் கூட்டத்தின் நோக்கமாகவுள்ள தண்டவியற் சட்டக்கோவையின் 138 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்படும் ஆட்கூட்டமொன்றின் உறுப்பினரொரு வராயுள்ள

எவரும் தண்டவியற் சட்டக்கோவையில் அல்லது இவ்வொழுங்குவிதிகளில் எது எவ்வாறிருப்பினும், குற்றமொன்றைப்புரிந்தவராகி உயர் நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் தூக்குத் தண்டனைக்கு அல்லது இருவகைமறியலிலொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(2) (ஆதனத்தைப் பாதுகாத்தற்குத் தனியாளுக்கிருக்கும் உரிமை சம்பந்தமாகவும், அத்த கைய உரிமையைப் பிரயோகித்தலில், தீங்கிழைக்கும் ஒருவருக்குச் சாவை அல்லது வேறேதேனும் துன்பத்தை எந்தச் சூழ்நிலைகளிற் செய்யலாம் என்பதை விதிப்பதுமான) தண்டவியற் சட்டக்கோவை யின் 96 ஆம் பிரிவு பின்வருவன அப்பிரிவின் இறுதியிற் சேர்க்கப்பட்டிருந்தாற்போன்று பயனுடைய தாதல் வேண்டும் :

" ஐந்தாவதாக—அவசரகால (நானாவித ஏற்பாடுகள், தத்துவங்கள்) ஒழுங்குவிதிகளின் 54 ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் குற்றம் "

(3) இவ்வொழுங்கு விதியின் கீழான ஏதேனும் குற்றத்திற்கான வழக்குத் தொடர்கை யொன்றுக்கான இவ்வொழுங்குவிதிகளின் 49 ஆம் ஒழுங்குவிதியின் கீழான, சட்டத்துறைத் தலைமை யதிபதியின் எழுத்துமூல அனுமதியானது, அக்குற்றம் செய்யப்படுகின்ற நேரத்தில் அல்லது நேர மளவில் நிலவிய உண்ணாட்டுக்குழப்பத்தை விரிவாக்கும் நோக்கத்தோடு, அல்லது அது தொடர்பாக அல்லது அதன் போது அக்குற்றம் செய்யப்பட்டதென்று சட்டத்துறை தலைமையதிபதி திருப்திப்படு மிடத்து வழங்கப்படுதல் கூடும்.

வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய கடமைப்பாடு

55. வேறேதேனுமொரு சட்டத்தில் முரண்பாடாக எது எவ்விதமிருப்பினும் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பாதுகாவலில் எடுபட்டு மறித்துவைக்கப்பட்ட ஒருவர் அத்தகைய பாதுகாவலின் போதும் மறித்துவைக்கப்படுதலின் போதும் யாரேனும் பொலிசுத்தியோகத்தரால் அல்லது தரைப்படை ஏவுநர், கடற்படைத் தலைவன் அல்லது ஆகாயப்படை ஏவுநரால் அதிகாரமளிக் கப்பட்ட வேறு யாரேனும் உத்தியோகத்தரால் வினாவப்படலாம் ; அவ்வாறு அவரிடம் வினாவப்படும் வினாக்களுக்கு விடையிறுத்தல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

பிரேதங்களை எடுத்துப் புதைத்தல் அல்லது எரித்தல்.

56. ஏதேனுமொரு பிரேதத்தைக் கையேற்பதற்கும், புதைப்பதற்கும் அல்லது தகனஞ் செய்வதற்கும் அவசியமான எல்லா வழிவகைகளையும் கையாளுதலும் அவ்விதம் புதைத்தலின் அல்லது தகனஞ் செய்தலின் நோக்கத்துக்கான அல்லது அதன் தொடர்பான கூட்டமொன்றிற் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடிய ஆட்களைத் தமது விருப்பப்படி தீர்மானித்தலும் உதவிப் பொலிசு கண்காணிப்பாளரின் தரத்துக்குக் குறையாத பொலிசு உத்தியோகத்தர் எவருக்கும் அல்லது பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தருக்கு அல்லது அவராலதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் உத்தியோகத்தருக்கு, அல்லது ஆளுக்குச் சட்டமுறையான தாகும். அத்தகைய உத்தியோகத்தரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அனுமதியின்றி அத்தகைய கூட்டமெதிலாவது சமுகமாயிருக்கும் அல்லது இதனகத்தே முன்னே வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலில் அத்தகைய உத்தியோகத்தருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குத் தடைவிளைக்கும் எவரும் ஒரு குற்றத்தைப் புரிந்தவராவார்.

இவ்வொழுங்குவிதியின் கீழ் பிரேதமொன்றைக் கையேற்பதற்கும் புதைப்பதற்கும் அல்லது தகனஞ் செய்வதற்கும் வழிவகைகளைக் கையாளும் உத்தியோகத்தர் அல்லது ஆள் எவராவது, மரணவிசாரணை சம்பந்தமான எழுத்திலுள்ள வேறேதேனுஞ் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்குதல் அவசியமாகாது.

உள்ளூரதிகார சபைகளின் தேர்தல்கள்.

57. எழுத்திலுள்ள வேறெந்தச் சட்டத்திலாவது எது எவ்விதமிருப்பினும், (262 ம் அத்தி யாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு உள்ளூரதிகார சபையின் அங்கத்தரொருவரைத் தெரிவு செய்யும் நோக்கத்துக்காக நடைபெறவிருக்கும் வாக்கெடுப் பெதாவது இவ்வொழுங்குவிதி நடைமுறையிலிருக்கும் வரையிலும் மாத்திரமே, நடைபெறுதலா காது. இவ்வொழுங்குவிதியில் " உள்ளூரதிகார சபை " என்பது ஏதேனுமொரு மாநகர சபை, நகர சபை, பட்டின சபை அல்லது கிராமச் சபை எனப் பொருள்படும்.

58. எழுத்திலுள்ள வேறெந்தச் சட்டத்திலாவது எது எவ்விதமிருப்பினும், இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள உள்ளூரதிகாரசபை யொவ்வொன்றினதும் இப்போது பதவியிலிருக்கும் அங்கத்தவர்களின் பதவிக்காலமானது, இவ்வொழுங்குவிதி எத்தேதியில் நடைமுறையிலிராதொழிகிறதோ அத்தேதிவரையில் இதனால் நீடிக்கப்படுகின்றது.

உள்ளூரதிகார சபைகள் சிலவற்றின் பதவிக்காலத்தை நீடித்தல்.

**அட்டவணை**

**பட்டின சபைகள்**

வாதுவ பட்டினசபை
வல்லுவெட்டித்துறை பட்டின சபை
கல்முனைப் பட்டினசபை

**கிராமச் சபைகள்**

**கொழும்பு மாவட்டம்**

நாறன்வல கிராமச்சபை
கெலனிய கிராமச்சபை

**கண்டி மாவட்டம்**

மெடப்பலாத்த உடநுவற கிராமச்சபை

**புத்தளம் மாவட்டம்**

யற்றக்கலன்பற்று கிராமச்சபை
முன்னேஸ்வரம் பற்று கிராமச்சபை

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

முகமாலை கிராமச்சபை
புலோலிக் கிராமச்சபை
சுளிபுரம் கிராமச்சபை

**காலி மாவட்டம்**

கொஸ்கொடை கிராமச்சபை

**மாத்தறை மாவட்டம்**

கம்புறுப்பிற்றிய கிராமச்சபை

**மன்னார் மாவட்டம்**

முசலைவடக்கு கிராமச்சபை
பண்ணன்காமம் கிராமச்சபை

**திரிகோணமலை மாவட்டம்**

கிண்ணியா கிராமச்சபை

59. எழுத்திலுள்ள வேறெந்தச் சட்டத்திலாவது எது எவ்விதமிருப்பினும், இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள கிராமச் சபையொவ்வொன்றினதும் அலுவல்களின் நிர்வாகமானது, அத்தகைய கிராமச் சபையின் கிராம இடப்பரப்பு எந்த நிர்வாகப் பிரதேசத்தினுள்ளிருக்கின்றதோ அந்தப் பிரதேசத்தின் உள்ளூராட்சி உதவிக் கொமிஷனரிடம் இவ்வொழுங்குவிதி நடைமுடையிலிருக்கும் வரையினும், அதுவரையிலும் மாத்திரமே, ஒப்படைக்கப்படுதல் வேண்டும் ; அதற்கிணங்க, அத்தகைய கிராமச் சபையொவ்வொன்றினதும் அலுவல்களின் நிர்வாகம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சியுதவிக் கொமிஷனர் முன்னே சொல்லப்பட்டுள்ள காலத்தில் (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலுள்ள வேறேதேனுஞ் சட்டத்தின் கீழ் அக்கிராமச் சபைக்கும் அதன் தலைவருக்குமுள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கவேண்டியதுடன் கடமைகளையும் புரிதல் வேண்டும்.

கிராமச் சபைகள் சிலவற்றின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரதேசங்களின் உள்ளூராட்சி உதவிக் கொமிஷனர்களிடம் ஒப்படைக்கப்படுதல்.

**அட்டவணை**

**மன்னார் மாவட்டம்**

மாந்தை மேற்கு கிராமச்சபை

**குருநாக்கல் மாவட்டம்**

கும்புக்வெவ கிராமச்சபை

**இரத்தினபுரி மாவட்டம்**

மாறப்பன கிராமச்சபை
பெல்மதுல்ல கிராமச்சபை

இலங்கை வாழைச்சேனை எஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.